நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 13 டிசெம்பர் 91 விலை ரூபா 5/-

# விலை போகிறது மலையகம்!


இந்த வருடத்து நவம்பர் மாதம் 21ம் திகதி சனிக்கிழமை மலையக மக்களின் வாழ்வில் ஏற்பட இருக்கும் அதிரடி மாற்றத்திற்கு அடியெடுத்துக் கொடுத்த முதல் நாள். அன்றுதான் பெருந் தோட்டங்களைத் தனியார் வசம் ஒப் படைப்பதற்கான திட்டத்தின் முதல் படியாக பெருந்தோட்ட நிர்வாகத்தை தனியார் துறையிடம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை அரசு பத்திரிகை கள் மூலம் கோரியிருந்தது.

அடுத்த வருட முற்பகுதியுள் பெரும் பாலும் எல்லாத் தோட்டங்களின் நிர் வாகமும் தனியாரிடம் மாறிவிடும். முகாமைத்துவத்திறன் 'வாய்க்கப்' பெற்ற தனியார் நிறுவனங்கள் எத் தனை தொழிலாளர்களைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப் போகிற தென்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். பெரிய சங்கங்க ளான இலங்கைத் தொழிலாளர் காங் கிரசும் ஐ. தே. கட்சித் தொழிற்சங்க மும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் இரண்டினதும் இயக்க விதிக ளைப் புரிந்து கொண்டு சர்வம் பிரேமதாசா மயம் என்று பின்னால் போய் விட்டார்கள்.

என்ன நடக்கிறது என்ன நடக்கப் போகிறதென்றே மக்களுக்குச் சொல் கிற சின்னத் தைரியம் கூட இவர்களு க்கு இல்லாமல் போய்விட்டது.

பெருந்தோட்டங்களை உண்மையா கவே மக்கள் மயப்படுத்த வேண்டு மென்றால் அங்கே உழைத்துச் சாகிற மலையக மக்களுக்கு அந்தத் தோட்ட ங்களைப் பிரித்துக் கொடுங்கள்! அது தான் மக்கள் மயப்படுத்தல். அதை விட்டு விட்டு வெளிநாட்டுக் கொம்பனி களிடமும் உள்ளூர்த் தலைவர்களிட மும் பெருந்தோட்டங்களை வழங்கி விட்டு மக்கள் மயப்படுத்தி விட்டோம் என்று கூக்குரலிட்டால் என்ன வழி?

ஆறுநாள் வேலை கொடுக்காவிட்டா லும் அரைவயிறு சோற்றை இந்த மக் களுக்கு எந்தத் தொண்டர்கள் வழங் கப் போகிறார்கள்?



## திருத்தொண்டா புராணம் - 1

*டெல்லிவாழ் அந்தணர் தம் அடியார்க்கு மடியேன்*
*தென்னிலங்கைப் பெரியோர்தம் மடியார்க்கு மடியேன்*
*இல்லையே என்னாத இந்தியர்க்கு மடியேன்*
*இவருடைய அடியார்க ளடியார்க்கு மடியேன்*
*அள்ளியே தருகின்ற அகில வங்கிக் கடியேன்*
*அன்பினுக்கு அடியார்க்கு எந்நாளு(ம்) அடியேன்*
*தொல்லையே தாராத தொழிலாளர்க(கு) உதையும்*
*தொழிலதிபர்க் கடியாராம் தொண்டாவுக் கானே.*

நன்றி - நூலகத்திட்டம்



# செல்வத் தமிழினி

லிங்கமோ சிங்கமோ தங்கமான பட்ஜட் என்று புது ஈரோஸ் எம். பி ஐயுப் பாராளுமன்றத்தில் பட்ஜட்டை வரவேற்றுப் பேசி இருந்தார்.

மொத்தமாக 66,980 மில்லியன் ரூபா துண்டு விழுகின்ற இந்தப் பட்ஜட் தங்கமோ, பொன்னோ- அவை சாதாரண மக்களுக்கு கிடைக்காதது போலவே சாதாரண மக்களுக்காக தயாரிக்கப்பட்டதல்ல என்பது அதை மேலோட்டமாக கவனிப்பவருக்குமே புரிந்துவிடும்.

இலங்கையின் சனத்தொகை சற்றேறக்குறைய 15 மில்லியன் எனக்கொண்டால் கடந்த ஆண்டுகளை விட இவ்வாண்டு இலங்கை அரசு புதிதாக மக்கள் மீது சுமத்தியுள்ள கடன் 4000/= அதாவது பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும் இவ்வாண்டுக்கான (கடந்த ஆண்டு கடன்கள் + வட்டி வேறு) கடனாக 4000/= கடனுடன் பிறக்கிறது.

இந்தக் கருத்தை வழமையான இடதுசாரித்தனமான கருத்து என்று யாராவது கூறக் கூடும்.



ஆனால், இறக்குமதித் தீர்வை வரிக்குறைப்பு, செல்வந்த வரிவிலக்குப் போன்றவை உள்நாட்டு உற்பத்தியாளர்களை நெருக்கடிக்குள்ளாக்கவும், பல்தேசியக்கம்பனிகளின் உற்பத்திப் பொருட்களை உள்நாட்டுக்குள் கொண்டு வந்து குவிக்கவும்தான் உருவாக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படை.

"வேலிக்கு ஓணான் சாட்சி" என்பது போல அரசுக்கு மத்தியவங்கி சாட்சி சொல்கிறது. புள்ளிவிபரங்களை மனம் போனபோக்குக்கு தருகிறது. பாராளுமன்றத்தில் இதுபற்றி எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விக்கு பதிலில்லை 12% என அரசு அறிவித்த பணவீக்கத்தை திணைக்களம் 15% என அறிவித்துள்ளது. உண்மை நிலையே 25% என்கிறார் ஒரு எதிர்க்கட்சி எம். பி.

உலக வங்கியின் பணிப்பின் பேரில் அதிகாரிகள் அதிருப்தியை வெளிப்படையாகக் காட்டி, இலங்கை அரசின் வருமானம் குறைவு என்று சொன்ன பின்னும் செல்வந்தவரி நிறுத்தப்படுகின்றது.

பட்ஜட்டுக்கு முதலே லக்ஸ்பிறே, அரிசி போன்றவை முறையே 6/=, 2/2/= வால் விலையேறிவிட்டன பட்ஜட்டுக்குப் பிறகும் இவை தொடரவுள்ளன.

நாணய மதிப்பிறக்கம், மானிய வெட்டு போன்ற உலக வங்கியின் பணிப்புரைகள் விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளன.

பட்ஜட் 'தங்கம்' என்று சொல்பவர்கள் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை (இது 80 இலிருந்ததை விட 25 மடங்கு அதிகம்!) யைப் பார்த்துத்தான் இவர்கள் இப்படி சந்தோஷப்படுகிறார்களோ தெரியவில்லை.

புலிகளையும் மக்களையும் சேர்த்தே அரசு அழித்து விட்டால் 'தங்கம்' மிஞ்சும் என்று கணக்குப் போட்டிருக்கக் கூடும்.

நாட்டின் வாழ்க்கைச் செலவுப்புள்ளி சுட்டெண் 735 ஆக உயர்ந்துவிட்ட பின் 100/= சம்பள உயர்வை வழங்கியிருக்கும் அரசாங்கத்தின் பட்ஜட் 'தங்கம்' என்பதற்கு வேறு என்ன அர்த்தம் இருக்க முடியும்?

ஒரு வேளை பட்ஜட்டோடு புதிதாக பாராளுமன்றத்துள் நுழைந்ததால் அந்த எம். பிக்கு அது அப்படி தோன்றிற்றோ என்னவோ? ...

சங்கர் ராஜியைத்தான் கேட்க வேணும்!

சரிநிகர்' ஆசிரியரிடமிருந்து எனக்கு ஒரு அழைப்பு வந்தது. என்னவாக இருக்கும் என்ற திகைப்புடன் போய் அவர் முன்நின்றேன் கையிலிருந்த கடிதம் ஒன்றை என்னை நோக்கி நீட்டினார் அவர். வழமைபோல அவரது இடதுகை தாடியைத் தடவிக் கொண்டிருந்தது. 'என்ன' என்று கேட்டப்படி வாங்கினேன்.

"படித்துப் பாரும் ......."

பா. உ. மாவை சேனாதிராசாவின் சார்பில் முகுந்தன் என்பவர் அனுப்பியிருந்த அந்தக் கடிதத்தைப் படித்து விட்டு அவரிடம் கொடுத்தேன். அக்கடிதத்துடன் பா. உ. வின் பாராளுமன்றப் பேச்சின் ஹன்சாட் போட்டோப் பிரதியும் இணைக்கப்பட்டிருந்தது.

அதைப்படித்த பின்னும் எனக்கு ஒன்றும் தோன்றாததால் ஆசிரியரைப் பார்த்தேன்.

'கடிதம் இம்முறை பேப்பரில் வருகுது' என்றார் அவர்.

"போடுங்கோ"

'என்ன போடுங்கோ என்கிறீர். இதற்கு உமது பதில் என்ன?'

'பதிலை நான் எழுதித் தர வேணுமோ? .... அதிலை நான் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படவில்லையே..... புலிகளுக்கு ஆயுதம் வழங்கும்படி எழுதிய கடிதம் பற்றித் கேட்கிறேன்......'

'மற்றவை பற்றி அவர் பேசி இருக்கிறார் தானே?'

அவை பற்றி அவர் பேசினது உண்மைதான். ஆனால் அவற்றிற்கு பதில் சொல்ல வேண்டியது அவரல்ல. மற்றைய அமைப்புகள் .....

ஆசிரியர் அதற்குப் பிறகு பேசவில்லை. அவர் தனது வேலையில் மூழ்கி விட்டார்.

சரியா, தவறா என்று சரிபார்க்காத தவறை ஆசிரியர் மீது சுமத்தியுள்ள முகுந்தனுக்கு சரி எது தவறு எது என்பதை புரிந்து கொண்டே கட்டுரையைத் தான் பிரசுரித்தேன் என்று சொல்லாமல் ஏன் என்னிடம் கேள்வி கேட்டார் என்று எனக்குப் புரியவில்லை. ஆசிரியர் தீவிரமாக அலுவலில் மூழ்கியிருந்ததால் அவரைக் கேட்க முடியவில்லை. நீண்ட நேரமாக யோசித்துப் பார்த்தேன். திடீரென்று பொறி தட்டினாற் போல ஞாபகம் வந்தது.

ஒழுக்கம் பற்றி கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும் என்று அவர் நினைத்திருக்கிறார். பத்திரிகையாளர்களது ஒழுக்கம் எது என்பதை நான் புரிந்து கொள்ள வேண்டுமென நினைத்திருக்கிறார் என்று புரிந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி பந்தியும், அதன் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பற்றியும், அவர்களது அரசியல் திருகு தாளங்கள் பற்றியும் நிறைய எழுதலாம். விறுவிறென்று அவர்களது 'ஒழுக்கக் கோவை' ஒன்று தயாரித்தேன். 1977 தேர்தலுக்கு சின் அவர்கள் மேடையில் பேசியதிலிருந்து மட்டக்களப்பில் மண் கவ்விய பின்னும் 'அப்புக்காத்து' திறமையைப் பயன்படுத்தி. பி. ஆர். எல். எப்பின் முதுகில் குத்தி விட்டுக் கதிரையில் அமர்ந்தது வரை ஞாபகத்துக்கு வந்தது. அத்தனையும் எழுதி முடித்தேன். கட்டுரை கொஞ்சம் நீண்டு விட்டது போலப் பட்டது.



எடுத்துக் கொண்டு ஆசிரியரிடம் போனேன். போகும் போதே மாவை சேனாதிராசாவின் பாராளுமன்ற உரைகளில் அடிக்கடி தமிழ் மக்களின் நலனைப் பிரதிபலிபின்ற விடயங்களும் இடம் பெறுவது உண்மை என்ற அடிக்குறிப்பை சேர்க்க வேணுமோ அல்லது கூட்டணியின் கடத்தகால அரசியல் திருகு தாளத்தின் போக்கின் முன்னால் அது முக்கியமற்ற ஒன்றோ என்று தீர்மானிக்க முடியாமல் இருந்ததை அவரிடம் சொல்லலாம் என்று யோசித்துக் கொண்டு போனேன்.
கட்டுரையை வாங்கி வேகமாக வாசித்து விட்டு, தாடியை வழமை போல வருடியபடி என்னைப் பார்த்து புன்னகைத்தார் ஆசிரியர்.

நான் பேசாமல் நின்றேன்;
"Facts are sacred; interpretation is free" என்று கூறியபடி திரும்பவும் தனது வேலையில் மூழ்கிக் கொண்டார்.
அது அவர்களது ஒழுக்கம்; இது எமது - பத்திரிகையாளர்களது - ஒழுக்கம் என்று எண்ணியபடி நான் திரும்பி வந்தேன்.
கட்டுரை பிரசுரமாகிறதோ இல்லையோ எனது கருத்து ஆசிரியருக்குப் புரிந்ததில் எனக்குத் திருப்தி.

பா. உவுக்கும் திருப்தி தானே.



சரிநிகர், மாதம் ஒரு முறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE) வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும், பத்திரிகை சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும் இனத்துவ சமத்துவத்திற்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகா நாகரிகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

எல்லாத் தொடர்புகளுக்கும்;

ஆசிரியர்
'சரிநிகர்'
6, அலோசாலை,
கொழும்பு - 3.


சந்தா:
ஒருவருடம் :
உள்நாடு: 60/=
வெளிநாடு: 15 US $

சந்தாவை காசுக்கட்டளை/ தபாற்கட்டளை/ காசோலை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



கடந்த மாதம் இலங்கையில் நடக்கவிருந்த சார்க் அமைப்பின் மாநாடு கடைசி நேரத்தில் நடைபெறாமல் போயிற்று. இலங்கை சனாதிபதி பிரேமதாச இவ்வமைப்பின் தலைவராக வருவதைத் தடுப்பதிலும், இலங்கையிலும் அதன் சனாதிபதியினதும் முகத்தில் கரிபூசுவதிலும் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.



இலங்கையில் ஜ.பி.கே. எப். நிலை கொண்டிருந்ததைக் காரணம் காட்டி இதற்குமுன் இங்கு நடக்கவிருந்த மாநாட்டை நடத்த முடியாது என அறிவித்ததும், இந்தியப்படையை எதிர்க்க புலிகளுக்கு இலங்கை ஆயுதம் வழங்கியது என்பதும் இது போன்ற இந்தியாவை தர்மசங்கடத்துக்குள்ளாக்கும் நடவடிக்கைகளையும் இலங்கை அரசு செய்ததற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக இந்தியா இதைச் செய்துள்ளது என்று இலங்கைப் பத்திரிகைகள் எழுதுகின்றன.


மாநாட்டால் வரப்போகும் மாற்றங்கள் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதின பொருளாதார ஒத்துழைப்புக்கு இம்முறை கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் அவை எழுதின. திறந்த பொருளாதார கொள்கையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிற இந்தியா ஏற்கெனவே அதை நோக்கிப் பாதிவழி வரை பாகிஸ்தானுடனான அதனது ஆயுதப் போட்டி, படைப் பெருக்கம் முதல் இலங்கையுடனான அதனது உறவுகளின் மேலாதிக்கத் தன்மைகள் பற்றி இந்த அமைப்பு விவாதிப்பதற்கான அனுமதியை அது எப்போதும் வழங்கியது கிடையாது. உதாரணமாக இலங்கையின் வான்பரப்புள் அத்துமீறி 1987இல் அது உணவுப் பொட்டலங்களை வீசிய அச்சுறுத்தும் நடவடிக்கை ஐ. நாடு. ஸ்தாபனம் மற்றும் சார்க் அமைப்பின் அடிப்படைகளையே மீறுகிறது ஒரு நடவடிக்கையாக இருந்த போதும், 1987 நவம்பரில் காத்மண்டுவில் நடந்த மாநாட்டில் இது பற்றிப் பேச இலங்கைக்கு அது அனுமதி வழங்கவில்லை.

ராவோவின் 'சினேகபூர்வமான அரசியல் உறவுகள்' என்பது இந்தியாவுடன் அதன் விருப்பத்திற்கேற்ப சினேகபூர்வமாக – நேபாளம், பூட்டான் போல இருப்பதென்பதை இந்தியாவின் அதன் பின்னான நடவடிக்கைகள் பல தெளிவாகக் காட்டுகின்றன.

1980 இல் லோக சபையில் பேசும் போது நேரு ஒரு தடவை இப்படிக் கூறினார். "இந்திய உபகண்டத்திலுள்ள எந்தப்பகுதியிலும் எந்த வெளிநாடும் கைவைப்பதை நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம்; நேபாளத்தை ஆக்கிரமிப்பது என்பது இந்தியாவின் பாதுகாப்பிற்கு நேரடி அச்சுறுத்தலாகும்..."

னதும்; நாம் உறுதியாக நம்புவது என்னவென்றால் சார்க் அமைப்பின் நோக்கங்களில் ஒன்றான பிராந்திய மக்களின் நல்வாழ்வு, சுபீட்சம் என்பன ஒரு நாடு இன்னொரு அங்கத்துவ நாட்டின் மீது தலையிடுவதோ, தனது முக்கியத்துவம் மற்றும் அளவு என்பன காரணமாக தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முயல்வதோ நிறுத்தப்படும்போதே சாதிக்கப்படமுடியும்"


# 6வது சா



- சஞ்சித்

இந்தியா இந்த மாநாட்டைக் காலவரையறையின்றி ஒத்திப் போடக் கோரியதற்கு முன் வைத்த காரணம் ஒரு நொண்டிக் காரணமாகும். பூட்டானின் உள்நாட்டுக் குழப்பம் காரணமாக அதன் மன்னக்கு இம்மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது என்ற 'திடீர்' காரணத்தை முன் வைத்து எல்லா நாடுகளினதும் தலைவர்கள் கலந்து கொள்வது மாநாடு நடத்துவதற்கு ஒரு முக்கிய நிபந்தனையாக இருப்பதனைச் சுட்டிக் காட்டி, இந்தியா மாநாட்டைப் பின்போடக் கோரியது. இதற்கு முன்பு இலங்கை சனாதிபதியின் சார்பில் பிரதமரும், பாகிஸ்தான் தலைவர்ஷியா உல் வரக் சார்பில் அவரது பிரதிநிதியும் கலந்து கொண்ட சந்தர்ப்பங்களைச் சுட்டிக் காட்டி இம் மாநாட்டை நடாத்த ஒத்துழைக்குமாறு இலங்கை இந்தியாவிடம் கோரிய போதும் இந்தியா அதற்குச் செவி சாய்க்கவில்லை.

விளைவு கட்டுநாயக்கா முதல் கொழும்பு வரை மூன்று மொழிகளிலும்பனர்கள்



தொங்கவிட்டு வீதிகளையும், வீதி முனைகளையும் அழகு படுத்தி 'மாவத்தே அப்பி' கலைஞர்களை தலைநகரை விட்டு அப்புறப்படுத்தி இலங்கை அரசு மேற் கொண்ட தயாரிப்புக்கள் எல்லாம் வீணாக, மாநாடு நடக்காமலே போயிற்று


சார்க் அமைப்பின் - இந்த மாநாடு நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே இலங்கைப் பத்திரிகைகள் இம் சென்று விட்ட இலங்கை உட்பட இந்த அனைத்துத் தெற்காசிய நாடுகளுக்குமிடையில் ஒரு உண்மையான கூட்டுறவு அவசியம் என்பது வெளிப்படை, தமது சொந்த மூல வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் பரஸ்பர ஒத்துழைப்பை அரசியல், ராணுவம் மற்றும் சமூக கலாசார அம்சங்களில் வலுப்படுத்தவும் இது அவசியம் என்று பல ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

ஆனால்!

இந்த 'ஆனால்' க்குப் பின்னாலுள்ள பெரிய சந்தேகம் சென்ற மாதம் இந்தியா கொழும்பு மாநாட்டை நடைபெறாமல் தடுத்ததில் உருவாகிய ஒன்றல்ல. இது சார்க் அமைப்பின் உருவாக்க காலத்திலிருந்தே இருந்து வருகிற ஒன்றாகும். அத்துடன் இந்தச் சந்தேகத்திற்குக் காரணம் தென்னாசியாவிலேயே 73.2% நிலப்பரப்பையும், 77% சனத் தொகையையும், 77.3% மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் (G.D.P) கொண்டுள்ள இந்தியாவாக இருப்பதும் ஒரு முக்கியமான அம்சமாகும்.

தென்னாசியப் பிராந்திய நாடுகளில் உள்ள எந்த நாடும் இந்தியா அளவுக்கு இராணுவ ரீதியிலோ பொருளாதார ரீதியிலோ பலமானவையல்ல. பாகிஸ்தான் நீங்கலாக மற்ற நாடுகள் அனைத்தும் இந்தியாவில் தங்கியிருக்கும் அளவுக்கு இராணுவ, பொருளாதார நிலைகளில் பலவீனமானவை மட்டுமல்லாமல் இந்தியாவினை எதிர்த்து சுயாதீனமாக நிற்க முடியாதனவுமாகும்.

இது பிற பிராந்திய அமைப்புக்களான ஆசியான், ஒபெக், G7 போன்றனவற்றைவிட 'சார்க்' அமைப்பினை வித்தியாசமாகக் காட்டும் ஒன்றாக உள்ளது. இதை நன்கு தெரிந்து வைத்துள்ள இந்தியா தொடக்க முதலே 'சார்க்' அமைப்பை தனது பிராந்திய மேலாண்மையைப் பேணுவதற்கான ஒரு அமைப்பாகப் பயன்படுத்தி வந்துள்ளது. தொடக்கத்திலிருந்தே பயங்கரவாதத்தை ஒழிப்பதையும், அதனைக் கண்டிப்பதை ஒரு அடிப்படை அம்சமாக இந்த நாடுகளின் மாநாடுகள் தமது



மஹ்மூன் அப்துல் கயூம்
மாலைதீவு ஜனாதிபதி

தீர்மானத்தில் குறிப்பிட்டு வந்தாலும், அதைக் கைவிடுவதில் இவை அக்கறை காட்டியதில்லை. ஒரு நாட்டின் உள்நாட்டு விடயத்தில் இன்னொரு நாடு தலையிடுவதில்லை என்ற ஏட்டளவு உடன்பாடு பஞ்சாப், காஷ்மீர், இலங்கையின் தமிழ்ப் பிரதேசம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் ஒரு போதும் கடைப்பிடிக்கப்பட்டது கிடையாது.

நேபாளம் பூட்டான் போன்ற நாடுகள் உலகுடனான தமது உறவுகளை இந்தியாவின் வாய் மூலமே பேச முடியும் என்ற ஒரு தன்மையையே இந்தியா மேற்கொண்டு வருகிறது. இந்தியாவின் இன்றைய பிரதமரான நரசிம்மராவோ அவர்கள் (அப்போது அவர் வெளிநாட்டமைச்சர்) சார்க்


அமைப்பு 1985 இல் உருவாவதற்கு முன்னோடியாக இருந்த பிராந்திய ஒத்துழைப்புக்கான நிரந்தரக் கமிட்டி ஆரம்பக் கூட்டத்தில் (1984) பேசும் போது இவ்வாறு கூறினார்.

"இந்த பிரதேசத்திலுள்ள நாடுகள் அதற்கிடையேயான சினேகபூர்வமான அரசியல் உறவுகளை பொருளாதார மற்றும் சமூக கலாசாரத் துறைகளிற்கும் வளர்த்து கொள்ள வேண்டுமென்று புரிந்து கொண்டுள்ளன...."

நேருவின் இந்த உரை நேபாளத்தைப் பற்றியது மட்டுமல்ல, இந்தப் பிராந்திய நாடுகள் அனைத்திற்கும் பொருந்துகிற இந்திய வெளியுறவுக் கொள்கையே என்பது சிக்கிம்மை தன்னுடன் இணைத்துக் கொண்டது முதல் இலங்கைக்குப் படையை அனுப்பியது வரை பல தடவைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எப்படியோ சார்க் நாடுகளின் அமைப்பென்பது,

இந்தியாவின் நோக்கங்களை நிறைவேற்றுகிற அல்லது இந்தியாவின் போக்குக்கு விட்டுக் கொடுக்கிற அல்லது அதன் மேலாதிக்கத்திற்கு எதிர்புத் தெரிவிக்க முடியாத ஒன்றாக இருக்கும் வரை அது எந்த விதப் பயனுமற்றது என்பது வெளிப்படை. பாகிஸ்தானிய வெளிநாட்டமைச்சர் யாஹூப் கானுக்கு 1989 இல் எழுதிய கடிதமொன்றில் முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இதுபற்றி குறிப்பிட்டார். 1989 இல் நடக்கவிருந்த மந்திரிமார் கூட்டத்தில் தான் கலந்துகொள்வதை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது என குறிப்பிட்டு அவர் எழுதி கடிதம் அது. அது சொல்கிறது"அடுத்த வாரம் உங்களால் கூட்டப்படவிருக்கும் கூட்டத்தில் நாம் கலந்து கொள்வதாக இருந்தோம். இது சார்க் மாநாட்டுக்கு வழி அமைத்திருக்கும் ஒன்றென



ஜிக்மே சிங்யே வஞ்சுக்
பூட்டான் மன்னர்

நாம் அறிவோம். ஆனால் இந்திய அரசின் இணக்கம் மற்ற தன்மை காரணமாக நாம் இதை இப்போது மீள்பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது" அவர் மேலும் சொன்

திரு பிரேமதாசவோ, அமைச்சர் ரஞ்சனோ அரசியல் சாணக்கியம் மிக்கவர்கள் என்று சொல்வதல்ல இந்த மேற்சொன்ன வரிகளில் ஆழமான அர்த்தம் பொதிந்துள்ளது என்ற உண்மையை தெரிவிப்பதே இது எழுதப்படுவதன் நோக்கமாகும்.

இன்றைய சார்க் ஒழுங்கமைப்பு வலியுறுத்தப்படுவது ஒன்றும் பிராந்திய நாடுகள் தமக்கிடையேயான மனப்பூர்வமான விருப்பினடிப்படையிலல்ல. மாறாக உலக வங்கியின் மேலாதிக்க உத்தரவின் பேரில் என்பது நுணுகி ஆராய்ந்தால் தெரிய வரும்.

ஜோர்ஜ் புஷ்ஷின் புதிய உலக ஒழுங்கில் பிராந்திய நாடுகள் தமது பரஸ்பர உறவுகளை இரண்டாம் பட்சமாக்கி ஐக்கியப்படுவதைப் பிரதானப்படுத்துவதில் கவனமில்லாமல் இருப்பது அனைத்திற்கும் இன்னொரு வகையில் ஆபத்தானதும் கூட.

இந்தியா இதை இன்று புரிந்து கொள்ளாவிட்டாலும், திறந்த பொருளாதாரத்தை நோக்கிய அதன் பாயில்கள் அகலத் திறந்துவிட நிர்ப்பந்திக்கப்படும் போது, அது திறக்கும் போது, புரிந்து கொள்ளப்படும்.

அப்போது வரவுள்ள நிலை இலங்கைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கு மட்டுமல்ல முழுப் பிராந்தியதிற்குமே - பிராந்திய மக்களுக்குமே ஆபத்தானதாக அமையும்.

அது உருவாக்கப் போகும் நிலைமையை விளக்க நம்மூர் நாட்டுப்பாடல் ஒன்றின் நாலு வரிகளே போதும்.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்ட வெள்ளரிக்காய்
காசுக்கு ரண்டாய் விற்கச் சொல்லி
காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்"

# தேசிய விடுதலைப் போராட்டம் - ஓர் மீளாய்வை நோக்கி...

அன்னபூரணா


இவ்வாய்வு பற்றி ........

ஈழவிடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி ... எனும் இத்தொடர் பற்றிய அபிப்பிராயங்களும் தகவல்களும் வரவேற்கப்படுகின்றன. இதில் தரப்படுகின்ற தகவல்களும் பங்களிப்பு செய்தவர்கள் பற்றிய விபரங்களும் போதுமானவை என நான் கருதவில்லை. அது தொடர்பான தகவல்களும் வரவேற்கப்படுகின்றன. இதில் வைக்கப்படுகின்ற அமைப்புக்கள் பற்றிய மதிப்பீடுகள் முழுமையானவையும் அல்ல. எனது அறிவுக்கெட்டிய வரையில் அம் மதிப்பீடுகளை முன்வைத்துள்ளேன். குறிப்பிட்ட அமைப்புகளோடு தொடர்புற்றிருந்தவர்களும், வாசகர்களும் தங்களது அபிப்பிராயங்களை முன்வைக்கலாம். இவையே இவ்வாய்வு பற்றிய பூரணத்துவத்தை கொணரும். தற்போதைய தேவை திறந்த மனதுடனான விவாதமே.

-அன்னபூரணா-

சென்ற இதழ்களில் ஈழப் போராட்ட அரசியல் இயக்கங்களுள் ஈழத்தமிழர் விடுதலை இயக்கம், தமிழ் மாணவர் பேரவை போன்ற அமைப்புக்களின் தோற்றம், அரசியல் நடவடிக்கைகள் நடாத்திய போராட்டங்கள் என்பன பற்றிப் பார்த்தோம். இதில் மாணவர் பேரவையே ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஆயுதப் போராட்டத்திற்கான அடித்தளமாக இருந்தது என்றும், ஆயுதப் போராட்டத் தலைவர்கள் பலர் இவ்வமைப்பிலிருந்து உருவானார்கள் என்றும் பார்த்தோம். இவ்விதழில் மாணவர் பேரவைக்கு அடுத்தபடியாக தோன்றிய அமைப்பான தமிழ் இளைஞர் பேரவை பற்றிப் பார்ப்போம்.

1972 இன் பிற்பகுதியில் தமிழ் மாணவர் பேரவையைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அது தலைமறைவாக இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் வெளிப்படையாக அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து இயங்குவதற்கு ஒரு அமைப்பின் அவசியம் பற்றி சில இளைஞர்களால் உணரப்பட்டது. அத்தோடு மாணவர் பேரவையின் அதிதீவிர ஆயுதப் போராட்ட கவர்ச்சியும், அரசியல் போராட்டத்தோடு அதனை இணைக்காத தன்மையும் அரசியல் ரீதியாக முன்னேறிய சில இளைஞர்களைக் கவலை கொள்ளச் செய்தன. அக்காலத்தில் தமிழரசுக் கட்சியும் தீவிரமான போராட்டங்கள் எதனையும் முன்னெடுக்காதது இவர்களை மேலும் கவலை கொள்ள வைத்தது. இந்நிலையில் தமிழரசுக் கட்சியைத் தீவிரமாகப் போராடும்படி தூண்டுவதன் மூலம் போராட்டங்களை முன்னெடுக்கலாமா? எனச்சிந்தித்தனர். இதனடிப்படையில் தமிழரசுக் கட்சியை தீவிரமாகப் போராடும்படி அதனிடம் ஒரு மகஜரைக் கையளிப்பது என


மாவை சேனாதிராஜா

முடிவு செய்தனர். இம் முயற்சியில் முன்னின்றவர் பிற்காலத்தில் ஈழப்புரட்சி அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவராக விளங்கிய குருநகரைச் சேர்ந்த பிரான்ஸிஸ் (சுந்தர்) என்பவராவார். இவரும் புஷ்பராஜா, வரதராஜாஜப் பெருமாள் (முன்னாள் வட கிழக்கு முதல்வர்) போன்ற இளைஞர்களும் சேர்ந்து மகஜர் ஒன்றை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகவிருந்த அ. அமிர்தலிங்கத்திடம் கையளித்தனர். அம்மகஜரில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கும்படியும், கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டனர். ஆனால் தமிழரசுக் கட்சியினர் வழக்கம் போலவே போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறி மகஜரை வாங்கிவிட்டு பேசாதிருந்தனர்.

தமிழரசுக் கட்சி தேசியப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடிய அமைப்பு அல்லவென்றும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு கட்சிசாராத புதியதொரு அமைப்பு உருவாக வேண்டியது அவசியம் என்றும் உணர்ந்தனர். இதனடிப்படையில் புதிய அரசியல் இயக்கத்தினை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இம்முயற்சிக்கான முதலாவது கூட்டம் யாழ். பிரதான வீதியிலுள்ள தமிழ் காங்கிரஸ் காரியாலயத்தில் 1973 இன் ஆரம்பத்தில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் புதியதோர் இளைஞர் அரசியல் அமைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இவ்வமைப்பின் பெயர், செயல் திட்டம், கொள்கைத் திட்டம், அமைப்பு விதிகள், செயற்குழு என்பவற்றை இன்னோர் தினத்தில் நடைபெறும் கூட்டத்தில் தீர்மானிப்பது என்றும், அக்கூட்டம் தொடர்பாக விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமிக்க இளைஞர்களுக்கு அழைப்பு விடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

முதற்கூட்டத்தில் ஏற்பபாடு செய்யப்பட்டபடி குறிக்கப்பட்ட தினத்தில் இரண்டாவது கூட்டம் தழிழரசுக் கட்சி காரியாலயத்தில் கூட்டப்பட்டது. இக்கூட்டத்திற்கு மாவை சேனாதிராஜாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால் மாவை சேனாதிராஜா அத்தினத்தில் கூட்டத்திற்கு வந்து அலுவலகத்திற்கு வெளியில் நின்றார். அப்போது கூட்ட ஏற்பாட்டாளர்களில் ஒருவராகிய புஷ்பராஜா " ஏன் அண்ணா வெளியில் நிற்கிறீர்கள்; நீங்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்" என அழைத்ததன் பேரில் கூட்டத்தில் கலந்து கொண்டார். கூட்டத்தில் அமைப்பின் பெயர் பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றபோது மாவை சேனாதிராஜா " தழிழ் இளைஞர் பேரவை" என்ற பெயரை வைக்கலாம் என ஆலோசனை கூறினார். இவ்வாலோசனயை வைத்துக் கொண்டு பிற்காலத்தில் தன்னால் தான் தமிழ் இளைஞர் பேரவை உருவாக்கப்பட்டது என வரலாற்றைத் திரித்துக் கூறியிருந்தார். உண்மையில் இவ்வாலோசனையத் தவிர அவர் அமைக்கப்பட்ட தமிழ் இளைஞர் பேரவையின் முக்கியமான பதவிகளிலோ, செயற்குழுவிலோ அங்கம் வகிக்கவில்லை. இக்கூட்டத்தில் மயிலிட்டி புஷ்பராஜா தமிழ் இளைஞர் பேரவையின் தலைவராகவும் வரதராஜப் பெருமாள் செயலாளராகவும், தெரிவு செய்யப்பட்டனர். பிரான்ஸிஸ் உமா மகேஸ்வரன் (plot தலைவர்) சந்திரமோகன், தங்க மகேந்திரன், ஆகியோர் முக்கிய உறுப்பினர்களாக இருந்தனர். பிரான்ஸிஸ் பதவிகளில் இல்லாத போதும் அமைப்பின் இயங்கு சக்தியாக விளங்கினார் அமைப்புக்கான யாப்பு விதிகள், செயற்திட்டம், கொள்கைகள் என்பனவும் அன்றைய தினக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தமிழன் தன் மானத்துடன் வாழ வேண்டுமாயின் தன்னைத்தானே ஆள வேண்டும் என்பேத முக்கியமான கொள்கையாக இருந்தது. அதுவரை நிலவிய தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் அவர்கள் தம் உரிமைக்காகப் போராடுகிறார்கள் என்ற கருத்தினை நிராகரித்து தமிழி மக்கள் ஒரு தேசிய இனம்; அவர்கள் தமது விடுதலைக்காகப் போராடுகிறார்கள் என்ற கருத்தினை முன்வைத்தனர். இக்கருத்தினை அமைப்புக்குள் வலியுறுத்தியவர் வரதராஜப் பெருமாள் ஆவார். இதன் பின்னரே தமிழரசுக் கட்சியினரும் சுதந்திரன் பத்திரிகையும், அக்கருத்தினை வலியுறுத்த ஆரம்பித்தனர். சுதந்திரன் பத்திரிகை தனது முதற்பக்கத்தின் அடிப்பகுதியில் "சிறுபான்மையோரின் உரிமைக் குரல்" என இருந்தகோஷத்தை மாற்றி " தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக் குரல்" எனப்பொறிக்க ஆரம்பித்தது. தமிழரசுக் கட்சியினரும் தங்களது கூட்டங்களிலும், அறிக்கைகளிலும் இக்கருத்தினை வலியுறுத்த ஆரம்பித்தனர். ஒரு தடவை நடந்த தமிழரசுக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராஜதுரை அவர்கள் பேசும் போது "தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்" எனக் கூறினார். அடுத்துப் பேசிய வரதராஜப் பெருமாள் அக்கருத்தினை மறுத்து "அண்ணன் இராஜதுரை அவர்கள் கூறியது தவறு; தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனமல்ல, அவர்கள் ஒரு தேசிய இனம் அவர்கள் தமது உரிமைக்காகப் போராடவில்லை. தங்களது விடுதலைக்காகப் போராடுகிறார்கள்" எனக் குறிப்பிட்டார். இக்கருத்தினையே இறுதியாகப் பேசிய அமிர்தலிங்கமும் ஏற்றுக் கொண்டு தம்பி வரதன் கூறியது தான் சரியானது அதனையே நாம் பின்பற்ற வேண்டும் எனக் கூறினார். இவ்வாறு ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஒரு கருத்து ரீதியான போராட்டத்தை தொடக்கி வைத்தவர்கள் இவர்களேயாவர்.

தமிழ் இளைஞர் பேரவையின் இரண்டாவது கூட்டத்தோடு அதன் அமைப்பினைப் பரவலாக்குவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன, வடக்கு கிழக்கு முழுவதும் அமைப்பு


வரதராஜப் பெருமாள்

வேலைகள் மும்முரமாக்கப்பட்டன. தமிழ்ப் பிரதேசத்திற்கு வெளியே கொழும்பிலும் மலையகத்திலும் கூட அமைப்பினைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்புக்கென கொழும்புக்கிளை அமைக்கப்பட்ட பிற்காலத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவராகவிருந்த உமா மேகஸ்வரன் அதன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அரசியல் ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதிலும் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். இவ்வகையில் அவர்களின் போராட்டங்களில் முக்கியமானதாக அமைந்தது ஐமபது நாள் உண்ணாவிரதப் போராட்டமாகும். சிறையில் இருந்த தமிழ் மாணவர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்களை விடுதலை செய்யக் கோரியே இப்போராட்டம் நடைபெற்றது இது தொடர்பாக சிறையிலிருந்த மாணவர் பேரவையைச் சேர்ந்த இளைஞர்களான வண்ணை நித்தியானந்தன், முத்துக் குமார சுவாமி என்போர் இளைஞர் பேரவை தலைவர் புஷ்பராஜாவிற்கு கடிதத்தினை எழுதியிருந்தார்கள். அக்கடிதத்தில் சிறையிலிருந்து தம்மை விடுதலை செய்வதற்கான அறிகுறி எதனையும் காணவில்லை என்றும், தமிழரசுக் கட்சியினரும் இது தொடர்பான நடவடிக்கை எதனையும் எடுக்காமல் இருக்கிறார்கள் என்றும், நீங்கள் ஏதாவது போராட்டங்களை நடாத்தா விட்டால் தாம் வெளியில் வருவது சாத்தியமில்லை என்றும், எனவே விரைவில் தங்களை விடுவிப்பதற்கான போராட்டங்களை நடாத்துமாறும் கேட்டிருந்தார்கள். இவ் வேண்டுகோளின் அடிப்படையிலேயே தமிழ்ப் பிரதேசத்திலும் கொழும்பு, மலையகம் போன்ற இடங்களிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இவ் உண்ணாவிரதப் போராட்டங்களில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தின்

—> பக்கம் 11

நன்றி - நூலகத்திட்டம்



பெருந்தோட்டத்துறையானது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் அவர்களின் நலனை கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழிற் துறையாகும். தோட்டத்தொழிற்துறைக்கு ஒன்றரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாறு உண்டு. 1827ம் ஆண்டிலேயே கம்பளை சில்க பிட்டியவில் முதலாவது பெருந்தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விதம் பல நூற்றாண்டு காலம் அந்நியராட்சிக் காலத்தில் உள்நாட்டு வெளிநாட்டு தனியார் நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்ட பெருந் தோட்டத்துறையானது 1972ம் 75ம் ஆண்டு நிலச் சீர்த்திருத்த சட்டங்களால் அரசாங்க உடமையாக்கப்பட்டது. பெருந்தோட்டங்கள் வெளிநாட்டு கம்பனிகளிடமும் சுதேச தனியாரிடமுமிருந்தபோது அத்துறையில் வாழ்ந்த மக்கள் ஒரு அடிமை வாழ்க்கையே வாழ்ந்தனர். அவர்களின் சமூக பொருளாதார அந்தஸ்தில் எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. அவர்கள் தொழிற்சங்க உரிமைக்காக பல போராட்டங்களை நடத்த வேண்டி இருந்தது. மீண்டும் தோட்டங்களை தனியார் மயமாக்குவதற்கான சூழல் இன்றாக அமையும். பெருந்தோட்டத்துறை சம்பந்தப்பட்ட போராட்டங்களோ அல்லது அவர்கள் சம்பந்தமான பிரச்சினைகளோ எழும்போது இலங்கையில் ஏனைய தேசிய இனங்களினதும் கவனமோ அல்லது அவர்களது போராட்டத்திற்கு ஆதரவோ கிடைப்பது மிக மிகக் குறிவு. ஒரு சில இடதுசாரி இயக்கங்களே கொஞ்சமாவது குரல் எழுப்புவது வழமை.

இ. தொ. கா. வழமை போல் மலையக மக்களின் நலன்களை விட்டுக்கொடுக்கும் நிலைபாட்டிலேயே உள்ளது. எனவே மலையக மக்கள் தமது சொந்தக்காலில் நின்று போராடுவதன் மூலமே மலையக தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும்.

### பெருந்தோட்டத்துறையின் தனித்துவமும் அதன் முக்கியத்துவமும்;

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் கூடுதலான பங்கை வகிப்பது பெருந்தோட்டத் துறையாகும். இதுவரையும் தனியார் மயமாக்கப்பட்ட கம்பனிகள் அல்லது கூட்டுத்தாபனங்கள் போல் அல்லாது சமூக பொருளாதார விடயங்களில் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தும். அடுத்து இலங்கையில் சாதாரணமாக ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியருக்கோ, அல்லது தொழிலாளர் விவசாயிகளுக்கோ அவர்களது கிராமங்களில் சொந்த காணியோ வீடோ அதிகமானோருக்கு உண்டு. ஆனால் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஒரு அங்குல நிலம் கூடச் சொந்தமில்லை. ஆகவே தனியார் மயமாக்கல் மூலம் தற்போது அரசாங்கத்திற்கு சொந்தமான வீட்டில் அல்லது நிலத்தில் இருக்கின்றோம் என்ற மனோநிலையை விடத் தனியாருக்குத் சொந்தமான தோட்டத்திலேயே தாம் வாழ்கின்றோம் என்ற சமூகப் பாதுகாப்பற்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றார்கள். ஆகவே அரசாங்கத் தோட்டங்கள் மக்கள் மயமாவதன் மூலமோ அல்லது தனியார் மயமாக்கல் மூலமோ அவர்கள் இன்று அரசாங்க தோட்டங்களில் அனுபவித்து வரும் பல சமூக நலத் திட்டங்கள் இல்லாதொழிக்கப்படுவதற்கு இது வழிகோலும்.

பதற்கு போதவில்லை என்றே கூற வேண்டும். 1990 ம் ஆண்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் பெருந்தோட்ட கூட்டுத்தாபனமும் தமது கடன்கள் மீது 500 மில்லியன் ரூபா கொடுப்பனவு செய்துள்ளது. உள்நாட்டு வங்கிகளிடமிருந்து 2000 மில்லியன் ரூபா மேலதிக பற்றுக் கடனாக பெற்றுள்ளது. அத்தோடு உள்நாட்டு நிறுவனங்களிடமிருந்து 3000 மில்லியன் கடனாக பெற்றுள்ளது. ஆகவே இன்று இந்த இரு பெருந்தோட்ட நிறுவனங்களும் நட்டத்திலேயே இயங்குகின்றன.

### நட்டத்திலிருந்து தோட்டங்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா?

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக மிக நீண்ட காலமாகவே கூறப்படுகின்றது தோட்ட அபிவிருத்திபற்றி சிபாரிசு செய்த சகல குழுக்களும் பல சிபாரிசுகளை செய்துள்ளன. தோட்ட நிர்வாகங்களுக்கு மிக ஆடம்பரமாகச் செலவழிக்கப்படுகின்றது இது வீண் விரயம் என்று சுட்டிச் காட்டப்பட்டுள்ளது.

த்துறை ஹோட்டல்களில் பங்கு தாரராகவும் சிலவேளை சொந்தக்காரராகவும் விளக்குகின்றார்கள். இந்த ஊழல்கள் தோட்ட உத்தியோகத்தர்கள் சிறிதளவு தொழிலாளர்கள் மட்டத்திலும் நிலவுகின்றது.

ஒரு துறையானது இலாபத்தில் இயங்க வேண்டுமானால் அத்துறையை விரிவு படுத்த வேண்டும் தோட்டங்களின் உற்பத்தியை பெருக்க வேண்டுமானால் முதலாவது தற்போது பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் உள்ள நிலப்பரப்பை கூட்ட வேண்டும். இரண்டாவது பெருந்தோட்ட பயிர்களுக்கான உள்ளீடுகளை பசளை உரம் களிப்பொருட்கள் போற்றவற்றை அதிகரிக்க வேண்டும். அவ்விதம் அதிகரிப்பதன் மூலம் ஏக்கருக்கான விளைச்சலையும் மொத்த விளைச்சலையும் அதிகரிக்கலாம். ஆனால் தோட்ட நிலங்களைப் பொறுத்தவரையில் 72ம் ஆண்டு நிலச் சீர்திருத்தத்தின் பின் திட்டமிடப்பட்ட குடியேற்றங்களுக்காகவும் தோட்டப் பொருளாதார பன்முகமாக்கல் என்ற பெயரில் தோட்ட நிலங்கள் துண்டாடப்பட்டது. ஆகவே பெருந்தோட்ட பயிர்ச் செய்கை நிலப் பரப்பு குறை

# இவர்களின் எதிர்காலம்?



பிரவீந்தன்

று காணப்படுகின்றது. மாத்தளை மாவட்டத்தை தவிர்த்து ஏனைய பெருந்தோட்ட பிரதேசங்களை 12 வலயங்களாக பிரித்து 12 தனியார் உள்நாட்டு வெளிநாட்டு கம்பனிகளுக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றை மகாராஜா, ஜோன் கீல்ஸ் போன்ற 20க்கு மேற்பட்ட கம்பனிகள் போட்டி போட்டு கொண்டு வாங்க முன்வருகின்றன.

ஏற்கனவே பல அரச கூட்டுத்தாபனங்கள் தனியார் மயமாக்கப்பட்டுள்ளன. இதில் தோட்டத் துறையைத்தனியார் மயமாக்குவது பல சமூக பொருளாதார சிக்கல்களை உண்டு பண்ணுவதாகவே அமையும். ஆகவே தோட்டங்கள் தனியார் மயமாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும்.

பெருந்தோட்டத் துறையைப் பொறுத்தவரையில் அதில் 80% ஈடுபட்டிருப்பவர்கள் மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் மலையகத் தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தின் ஒரு பகுதியினராவர். இந்தத் தனியார் மயமாக்கல் தோட்டத் தொழிலாளர்களை மாத்திரமல்ல அவர்களின் வழித்தோன்றல்களை உள்ளடக்கிய முழு மலையகத் தமிழ் தேசிய இனத்தையே பாதிக்கும் நாலு இலட்சம் தொழிலாளர்களை ஊழியப்படையாகக் கொண்ட ஒரு பாரிய தொழிற் துறையாகும். அதுவும் 80% தமிழ் பேசும் மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்களை இப்பெருந்தோட்ட பிரிவு உள்ளடக்கியுள்ளது. இலங்கையிலேயே ஆகக் கூடுதலான ஊழியப்படையினருக்கு வேலை வாய்ப்பை வழங்கும் துறை இதுவாகும். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பும் அதன் பின்பும் கூட இந்நாட்டு மக்களின் அடிப்படை வசதிகளை உருவாக்குவதில் இத்துறையில் கிடைத்த வருமானம் பாரிய பங்கை வகித்தது. புகையிரத வீதிகள், பெருந் தெருக்கள் சுகாதார வசதிகள் கல்வி போன்ற சமூக நலத் துறைகள் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் இத்துறையால் கிடைத்த வருமானம் கணிசமான பங்களிப்பை செய்துள்ளது.

இது வரையும் தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனங்களிளோ அல்லது அரச கூட்டுத்தாபனங்களிலோ சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் மாதச் சம்பளமே பெறுகின்றார்கள். ஆனால் தோட்டத் தொழிலாளரைப் பொறுத்த வரையில் நாட்கூலி பெறுகின்றவர்கள். ஆகவே தனியார் மயமாக்கல் மாதச் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்களை பாதிப்பதையும் விட இந்நாட்கூலி பெறும் தொழிலாளர்களின்

### பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன;

தோட்டங்கள் ஏஜென்சி நிறுவனங்களின் பொறுப்பில் இருந்தபோது அதாவது ஸ்டேலில் ரூபி கம்பனிகளின் கையிலிருந்தபோது தோட்டங்கள் மூலம் கிடைத்த வருமானங்கள் பெருமளவு வெளிநாட்டு கம்பனிகள் மூலம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆகவே பெரும் தொகையான வருமானம் வெளிநாடுகளுக்குச் செல்கின்றது என்ற அடிப்படையிலேய தோட்டங்கள் அர்சாங்க உடமையாக்கப்பட்டது. ஆனால் இன்று மீண்டும் இத் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படவுள்ளது. இதற்கான காரணமாக தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதாக கூறப்படுகின்றது. 1971ம் ஆண்டிலிருந்தே அரசாங்க மானியத்தின் மூலமே தோட்டங்கள் இயங்க ஆரம்பித்தது. 1971ம் ஆண்டு வரவு செலவு திட்டத்திலிருந்து 37.1 மில்லியன் ரூபா பெருந்தோட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இத் தொகை 1981ல் 87.7 மில்லியனாக அதிகரித்தது. இத்தொகை 1991ம் ஆண்டுகளுக்கு 1683.7 மில்லியன் ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கத்தால் கிடைக்கின்ற இந்த நிதி மூலம் இயங்குவதால் பெருந்தோட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் இதனை நிர்வகிப்

தோட்டத் துரைமார் இலங்கையின் சகல குறைகளையும் விட மிக அதிகமான சம்பளத்தை பெறுகின்றார்கள். சம்பளம் என்று ஒரு குறிப்பிட்ட தொகையும் பல்வேறு விதமான ஆடம்பர வசதிகளும் வழங்கப்படுகின்றது. அரசாங்க துறையில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு சாதாரண ஜீப் வழங்கப்பட்டால் இவர்களுக்கு மிக ஆடம்பரமான பஜிரோக்கள் வழங்கப்படுகின்றன. தோட்டத் துரைமார் குட்டி ராஜாக்கள் போல் வாழ்கின்றனர். அரசாங்க உத்தியோகத்தில் வைத்தியர்கள் பொறியியலாளர்கள் உயர் நிர்வாக உத்தியோகத்தர்களை விட எந்தவித பட்டமும் அத்துறை சம்மந்தமாக பெற்றிராத தோட்டத்துரைமார்கள் (குறைந்தது விவசாய டிப்ளோமோ சான்றிதழ் கூட பெறாதவர்கள்) மிக கூடுதலான வருமானத்தை பெறுகின்றார்கள்.

அடுத்து தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதற்கு இன்னொரு காரணம் தோட்டத் துறையில் காணப்படும் ஊழல்கள் ஆகும். தோட்டத்துறையில் அதிகமான துரைமார் பொருட்களை கள்ளமாக விற்கிறார்கள். இக்களவில் தேயிலை, உரவகைகள் கிருமி நாசினி கண்ரெக்ட் போன்றவை அடங்கும். இதனால் தோட்டத் துரைமார் தலைநகரில்உல்லாசப் பயண

க்கப்பட்டதாலும் தோட்டங்களின் வருமானம் குறைந்துள்ளது. தோட்டநிலங்களில் தொழிலாளர்கள் குடித்தொகை அதிகரிப்புக்கேற்ப பயிர்ச் செய்கை காணி கூட்டப்படவில்லை. மாறாக குறைந்துள்ளது.

உர பாவிப்பு குறைவு காரணமாக உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு உரங்கள் கள்ளத்தனமாக விற்கப்படுவதும் ஒரு காரணமாகும். இதனால் நிலத்தின் உற்பத்தி திறன் குறைந்துள்ளது.

கொரியா போன்ற நாடுகளில் தேயிலை உற்பத்தி ஏக்கருக்கு 2000 - 3000 கிலோ விளைவு காணப்படுகின்றபோது இலங்கியில் ஏக்கருக்கு 900-1200 கிலோ வரையே உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே பாரம்பரிய உற்பத்தி முறை மற்றும் உரப்பயன்பாடு குறைவால் விளைச்சல் குறைந்து வருமானம் • குறைகின்றது. ஆகவே இந்த நிலைமைகளை சீர் செய்து வருமானத்தை கூட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

அடுத்ததாக இன்று உலகில் தேயிலை, இறப்பர் தோட்டங்களில் நவீன உற்பத்தி முறைகள் புதிய வகை தேயிலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

→ பக்கம் 11

நன்றி - நூலகத்திட்டம்





பெருந்தோட்டத் துறையின் இரு பெரிய ராட்சதர்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை (JEDB) அரசபெருந்தோட்ட யாக்கம் (SPC) ஆகிய இரண்டின் மறுசீராக்கம் பற்றி கொள்கைத் திட்டம் ஒன்றை வரைய சென்ற வருடம் ஜுன் மாதம் அரசு பணிப்புக் குழு ஒன்றை நியமித்தது. இந்தப் பணிப்புக் குழுவின் சிபாரிசின் படி அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகப் பின்வருவன இருக்க வேண்டும்.

1. பெருந் தோட்டத் துறையில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட வேண்டும்.

2. அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும் வகையில் வர்த்தக மயமாக்கப்படவேண்டும்.

உடனடித் திட்டமாகப் பின்வருவன வழங்கப்பட்டன.

1. தனியார் துறையிடம் பெருந் தோட்டங்களின் முகாமை நிர்வாகம் வழங்கப்பட வேண்டும். இது ஒரு முகாமை ஒப்

* இரண்டு கூட்டுத்
பனங்களும் சிறு சிறு அ
களாகப் பிரிக்கப்படும்.

* ஏற்கெனவே உ
11 பிரதேச பெருந்தோட்
சபைகள் சுதந்திரமான கெ
பனிகளாக 1987 ஆம் ஆ
டின் 23வது சட்டத்தின் அ
ப்படையில் மாற்றப்பட வே
டும். இந்தப் பதினாறு சபை
ளும் 22 பிரிவுகளாகப் பிரி
ப்பட்டு வழங்கப்படவேண்டு
என்பதே பின்னைய தீர்
னம்.

* கண்டி, மாத்தளை
பகுதிகளிலுள்ள 60 பெ
தோட்டங்கள் மிகவும் மே
மான நிலையிலிருப்பத
அவை இந்த 22 கெ
பனிகளுள் சேர்க்கப்பட
டா.

* இந்த இருபத்திர
கொம்பனிகளும் தனியார்
ஆரம்பத்தில் முகாமைக்
வழங்கப்படும்.



# இன்னுமொ... விரட்டப்பட...



பந்தம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு அரம்பத்தில் 5–7 வருடங்களுக்கு தனியாரிடம் வழங்கப்பட வேண்டும்

2. இந்தக் கால முடிவின் போது அரசு பின்வரும் விஷயங்களைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

1) பெருந்தோட்டத் துறையில் அரசின் பங்கு நன்கு குறைந்திருக்கிறதா இல்லையா என்பதை.

2. தனியார் துறையின் நிர்வாகத் திறமை பற்றிய மதிப்பீடு.

3. எவ்வளவு காலத்துக்குப் பெருந்தோட்டங்களைக்குத்தகைக்கு விடலாம் என்ற கணிப்பீடு.

முகாமையைத் தனியாரிடம் வழங்குவதற்கும் பெருந்தோட்டத்துறையை முற்றாக மறுசீரமைக்கவும் பின்வரும் தந்திரோபாயம் கையாளப்பட வேண்டும். என்று ஆலோசனை வழங்கப்பட்டது.

* சந்தைப்படுத்தல்,
சேமிப்பு, பசளை இறக்கு
போன்ற அனைத்தும்
யார் கொம்பனிகளிடம் வ
கப் படவேண்டும்.

* தொழிலாளர்கள்
அனைவரும் பிரதேசக் கெ
பனிகளின் ஊழியர்க
மாறுவர்.

* நிலம் 99 வருடக்
தகையில் பிரதேசக் கெ
பனிகளுக்கு வழங்கப்ப
ஏனென்றால் இப்போது
நிலச்சீர்திருத்தச் சட்டங்க
படி 20 ஹெக்டெயர் நி
திற்கு மேல் ஒருவர் வைத்
க்க முடியாது.

* உருவாக்கப்பட்ட
ண்டு வருடங்களில் த
தனித் தோட்டங்களை ந
கிக்க இருக்கும் முகா
கொம்பனிகள் தமது ப
களில் 30% வீதத்தைப் பெ
மக்களுக்கு விற்கும் வகை
பொதுக்கொம்பனிகளாக
மாறவேண்டும்.

மலையகத்தின் பெருந்தோட்டத்துறை தனியார் துறையிடம் கையளிக்கப்படப் போகிறது என்பது இப்போது நிச்சயமாகி விட்டது. மலையக மக்களது வாழ்வோடு பின்னிப் பிணைந்துவிட்ட பெருந்தோட்டத் துறை, பேராசிரியர். வி. நித்தியானந்தன் தன்னுடைய நடேசய்யர் நினைவுப் பேருரையில் குறிப்பிட்டது போல ஒரு முழு வட்டம் சுற்றி வந்து விட்டது. தனியார் துறையில் ஆரம்பித்துப் பின்னர் 'தேசிய மய' மாக்கப்பட்டு இன்று மறுபடியும் தனியாரிடம் திருப்பி ஒப்படைக்கப்படப் போகிறது.

உற்பத்தித் திறன் இன்மை முகாமைத் திறனின்மை, அக்கறையின்மை போன்ற பல காரணிகள் பெருந்தோட்டத்துறையின் இன்றைய வீழ்ச்சிக்குக் காரணமான பாரம்பரியக் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

பெருந்தோட்டத்துறையின் வீழ்ச்சியை ஈடு செய்ய, வெறுமனே பொருளாதார, லாப நோக்கை மட்டுமே மையங் கொண்ட அணுகுமுறையின் விளைவான தனியார் மயமாக்கல் திட்டம் அரசியல், சமூகத் தளங்களில் மலையக மக்களைப் பொறுத்து நிறையச் சிக்கல்களை ஏற்படுத்தப் போகிறது.

இந்தத் தனியார் மயமாக்கல் திட்டம் பற்றிய சண்முகம் அறிக்கை, மற்றும் பெருந் தோட்டங்களை மறு சீரமைப்பது தொடர்பான வேறு பல அறிக்கைகள் அனைத்தும் இன்னும் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. பெரிய தொழிற் சங்கங்களான இ. தொ. கா போன்றன இத்தனியார் மயமாக்கலை ஆதரிப்பது மட்டுமல்ல இத் தனியார் மயமாக்கலின் பின் விளைவுகளைப் பற்றி மக்களுக்கு உண்மையைச் சொல்லாமல் அரசுடன் இரகசியப் பேரம் பேசுவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். திரு. தொண்டமானும் இ. தொ. காவும் சில கொள்கையடிப்படையில் தனியார் மயமாக்கலை ஆதரிப்பதாகச் சொல்லப்படுகிறது. அது என்ன அடிப்படை என்று இதுவரை தெரியவில்லை.

தொழிலாளர் குடியிருக்கும் லயங்களை அவர்களுக்கே சொந்தமாக்குவது அல்லது 20 பேர்ச் காணி வழங்குவது போன்ற விஷயங்களைக்குறித்து இ. தொ. கா. பிரேமதாச அரசுடன் பேரம் பேசுவதாகச் சொல்லப்பட்டாலும் உண்மை என்னவென்பது தெரியவில்லை.

இத்தகைய இரகசியப் பேரங்கள் வெளியில் வருகிற போது காமினி திஸா நாயக்கா, போன்றவர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கண்மூடித்தனமாக எதிர்க்கும் என்பது ஏற்கெனவே தெரிந்தது.

தனியார் மயமாக்கலின் படி முறையில் மேலதிகமாக உள்ள தொழிலாளர்கள் வெளித்தள்ளப்படுவது தவிர்க்க முடியாதது. மேலும் இது வரையான எல்லாத் திட்டமிடலும் மலையகப் பெருந்தோட்டத்துறையை, அதனுடைய சேதான பூர்வமான பிணைப்புகளான மலையகத் தமிழ்த் தொழிலாளர், அவர்தம் வாழ்வு, இனத்துவப் பிரச்சினைகளைக் கவனத்திலெடுக்காது ஒரு பொருளாதார உற்பத்தி அலகாகவே அணுகியுள்ளன. இந்தக் காமாலைப் பார்வை பொருளாதாரக் குறுக்கல் வாதத்திலிருந்து எழுகிறது. நீண்ட காலக் கண்ணோட்டத்தில் இதன் விளைவாக உருவாகும் அரசியல் சமூகப் பிரச்சினைகள் குறுகிய காலப் பொருளாதார நலன்களைக் கழுவேற்றி விடும் என்பதை எல்லா அதிகாரிகளும் உணரத் தவறுகிறார்கள்.

மலையகத் தொழிற் சங்கங்களும் இது பற்றிய சிரத்தை எடுக்காத வகையில் விஷயங்கள் ரகசியமாக நடந்தேறியுள்ளன.

இதுவரை கால வரலாற்றைப் போல, இம்முறையும் மலையக மக்கள் ஏமாற்றப்படப் போகிறார்களா?

உருவாக்கப்பட்டுள்ள இருபத்திரண்டு பிரதேசங்களும் ஏற்கெனவே உள்ள பிரதேச வரையறையை அடிப்படையாக வைத்தே உள்ளன என்று சொல்லப்பட்டாலும் அதை நம்புவது கடினமாக உள்ளது. இந்த இருப்பத்திரண்டு பிரதேசக் கொம்பனிகளின் கீழ்வரும் பெருந்தோட்டங்கள் எவையெவை? இந்தப் பிரதேசத்தின் எல்லை/ பரப்பளவு என்ன என்பது பற்றிய விபரங்களும் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன.

எந்தத் தொழிற்சங்கமுமே பலமாக அமையமுடியாதபடி இந்தப் பிரதேசங்களில் 'பெருந்தோட்டங்கள் வடிவமைக்கப்பட அல்லது மாற்றியமைக்கப்பட உள்ளன என்று நம்பிக்கையான சில வட்டாரங்களிலிருந்து அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இது உண்மையானால் மலையக மக்களின் சமூக அரசியல் பலம் கணிசமான அளவு பாதிக்கப்படும் என்பது நிச்சயம். மேலும் மலையகத் தொழிலாளர்களை

• மறு சீரமைக்கப்பட்ட பெருந்தோட்டத்துறையைப் பினவரும் சித்திரம் தெளிவாக விளக்குகிறது.

தனியார் மயமாக்கலின் பிற்பாடு நிச்சயமாக வாரத்துக்கு ஆறுநாள் வேலை கிடைக்கும் என்று எந்தத் தோட்டத் தொழிலாளியும் நம்பி ஏமாறக்கூடாது.

வேலை கிடைக்கிறதோ இல்லையோ தோட்டங்களில் 'சும்மா' ஆகவாவது தோட்டத் தொழிலாளர்கள் இருந்து கொண்டு தங்களுக்குத் தேர்தல் காலங்களில் வோட்டுப் போட்டால் போதும் என்பதே இ. தொ. காவின் சிந்தனை என்று தெரிகிறது.

**இப்போதுள்ள அமைப்பு:**

அரசு
↓
பெருந்தோட்டத் தொழிற்றுறை அமைச்சு
↓ ↓
மக்கள் தோட்ட அபிவிருத்திச்சபை | அரச பெருந்தோட்ட யாக்கம்
↓ ↓
500க்கு மேற்பட்ட பெருந்தோட்டங்கள்

**இனிவரப் போவது:**

அரசு
↓
பிரதேசக் கொம்பனிகள் தனியார் துறை
↓ ↓ ↓ ↓ ↓
ஒவ்வொன்றும் ஏறத்தாழ 20 பெருந்தோட்டங்கள் கொண்ட அலகுகள் – 22 (தனியார் துறை).



# முறையும் போகிறார்களா ?



தனியார் கொம்பனி ஊழியர்களாக மாற்றி விடுவதன் மூலம் அரசால் வழங்கப்படும் குறைந்த பட்ச உத்தரவாதம் கூட அவர்களுக்கு இல்லாமல் போய்விடும்.

இ. தொ. காவைப் பொறுத்த வரையில் இந்த மலையகப் பிரதேசங்களிலிருந்து மலையக மக்கள் வெளியேற்றப் படுவதை அது அனுமதிக்காது. ஏனெனில் இ. தொ. காவின் வாக்கு பலம் அந்த மக்களிடம் உண்டு. மேலும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் பிரதிநிதித்துவம் பெற வேண்டுமானால் பெறவேண்டிய குறைந்த பட்ச வாக்குகளை இ. தொ. கா. உறுதிப்படுத்தியாக வேண்டும். ஏனெனில் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தில் இது அவசியம். இதனால்தான் வேலை வழங்கப்படுகிறதோ இல்லையோ தோட்டத்தொழிலாளர்களுக்கு இருப்பிடங்கள் சொந்தமாக வேண்டும் என்ற கோரிக்கையை இ. தொ. கா முன்வைக்கிறது.

பெரிய தொழிற்சங்கம் என எப்போதும் பெருமையடித்துக் கொள்கிற இ. தொ. காவும் 'தனித்துவமான தலைவர்' என்று விவஸ்தையில்லாமல் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ளும் தொழிற் சங்கத் தலைமைகளும் மலையக மக்களுக்குத் தங்கள் திட்டங்களையும், எதிர்காலம் பற்றிய முன் மொழிதலையும் பகிரங்கமாக வைக்க வேண்டும். சொந்த நலன்களுக்கும், கட்சி நலன்களுக்கும் மக்களை விலையாகச் செலுத்துவதுதான் எமது பாராளு மன்ற ஜனநாயகமாகப் போய் விட்டது!

நமது மலையக நிருபர்



நன்றி - நூலகத்திட்டம்



**தைத்தேனியம் (Titanium) - நவீன உலகில் மிக வேண்டப்படும் ஒரு உலோகம்; வடகிழக்கு மாகாணங்களின் துண்டிப்பு - தமிழர் அரசியலின் அடிப்படைப் பிரச்சினை; இவை இரண்டிற்கும் என்ன தொடர்பு? தொடர்பு உண்டு. இத்தொடர்பைப் பற்றிய சிறு பரிசீலனையானது வடகிழக்குப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வை அரசு ஏன் முன்வைக்க தயங்குகிறது என்பதற்கான இன்னொரு பின்னணியைத் தெற்றென விளக்கும்.**

# இணைப்புக்கு எதிர் இன்னொரு பின்னணி...

தைத்தேனியம் (Ti) என்ற உலோகமும், தைத்தேனியம் ஈரொட்சைட் என்ற இரசாயனப் பொருளும் (இதனை $TiO_2$ என்று இரசாயனவியலார் குறிப்பிடுவர்) நவீன உலகின் சில முக்கிய தேவைகட்கு இன்றியமையாதன எனில் மிகையாகாது, துருப்பிடித்தலை தவிர்ப்பதற்காக மிக நவீன போர் விமானங்கள், விண்வெளிக்கலன்கள் ஆகியவற்றை ஆக்கப் பயன்படும் கலப்பு உலோகங்களில் (Alloy) தைத்தேனியம் முக்கியமாகச் சேர்க்கப்படுகிறது. ஆகாய விமானங்களின் உற்பத்திக்கு தைத்தேனியம் இன்றியமையாதது. இன்னும் பிளாஸ்ரிக் தொழிற்றுறையில் தைத்தேனியம் வகிக்கும் பங்கும் அளப்பரியது.

உலகில் தேவைப்படும் தைத்தேனியத்தைவிடக் குறைந்தளவே அது உற்பத்தியாகப்படுகிறது. இதற்கு இருகாரணங்களுண்டு, ஒன்று, மூலப்பொருட் பற்றாக்குறை. இரண்டு தைத்தேனிய உற்பத்திக்கான தொழில் நுட்பம் ஓரிரு அமெரிக்க பல்தேசிய கொம்பெனிகளிடமே இருப்பது. தைத்தேனியம் ஈரொட்சைட்டானது வர்ணப்பூச்சுகள், சாயங்கள் (Dyes) ஆகியவற்றின் உற்பத்திக்கு அடிப்படையாக தேவைப்படும் ஒரு இரசாயனப் பொருள். தைத்தேனியம் ஈரொட்சைட்டுக்கான உலகத் தேவையும் அதன் உற்பத்தியை விடக் கூடுதலாகவே உள்ளது. ஆசியாவில் இன்று மிகத்துரிதமாக கைத்தொழில் மயமாகி வரும் நாடுகளில் தைத்தேனியம் ஈரொட்சைட்டிற்கான தேவை மிகத் துரிதமாக நாளாந்தம் அதிகரித்து வருகிறது. ஆசியாவின் கைத்தொழில் மயமாகிவிட்ட நாடுகளில் தோன்றியுள்ள தைத்தேனியம் ஈரொட்சைட்டுக்கான சந்தையைப் பயன்படுத்தி இலாபமீட்டும் நோக்குடன் சவூதி அரேபியாவிலும், சிங்கப்பூரிலும் இரு தைத்தேனியம் ஈரொட்சைட்டு தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. தைத்தேனியம், தைத்தேனியம் ஈரோட்சைட்டு ஆகியவற்றிற்கான ஆசியாவின் புதிய பாரிய சந்தை மேற்கு நாட்டுப் பல்தேசிய நிறுவனங்களைத் தீவிரமாகக் கவர்ந்துள்ளது.

உலகிலேயே தைத்தேனியம் ஈரொட்சைட்டுச் செறிவு (54%) கூடிய தைத்தேனியக் கனிமம் (ore) புல்மோட்டை கடலோரம் கிடைக்கிறது. உறூட்டைல் (Rutile) இல்மனைட் ஆகியனவையே தைத்தேனியக் கனிமங்களாகும். இக்கனிமங்கள் அலை இயக்கத்தின் (wave action) காரணமாக கடற்கரையோரம் படிகின்றன. வருடாந்தம் ஐம்பதினாயிரம் தொன்னிற்கு மேற்பட்ட இல்மனைட், உறூட்டைல் கனிமம் வெளிநாட்டிற்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகிறது. பல வருடங்களாகக் கொழும்பைச் சேர்ந்த (அரசைக் கைக்குள் போட்டுக் கொண்ட) ஒரு வியாபார நிறுவனம் இக்கனிமங்களைத் தொன் ஒன்றிற்கு 40 அமெரிக்கடொலர் வீதம் கொள்வனவு செய்து சர்வதேசச் சந்தையில் விற்றுள்ளது. இக்காலகட்டத்தில் சர்வதேசச் சந்தையில் உறூட்டைல், இல்மனையு; கனிமங்கள் தொன் ஒன்றிற்கு 120 அமெரிக்க டொலராக இருந்திருக்கிறது. இதனால் வருடாந்தம் ஏறத்தாழ 25 இலட்சம் அமெரிக்க டொலரை இந்நிறுவனம் நிகர இலாபமாக ஈட்டி வந்துள்ளது. இதே வேளை தைத்தேனியம் ஈஸ்ரீராட்சைட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஒரு அமெரிக்கப் பல்தேசிய நிறுவனம் தனது இலங்கைத் தொடர்புகளூடாக இங்கு ஒரு தைத்தேனியம் ஈரொட்சைட்டுத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. இம்முயற்சியில் அமெரிக்க நிறுவனம் சார்பாக செயல்பட்ட நபர் ஐக்கியதேசியக் கட்சியுடன் முரண்பட்ட அரசியல் சார்புடையவராக இருந்தைமயால் காரியம் கை கூடவில்லை. அத்துடன் இல்மனைட், உறூட்டைல் ஏற்றுமதியி கொள்ளை இலாபமீட்டிக் கொண்டிருந்தவர்களும் இம்முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தனர்.

தைத்தேனிய உலோகம், தைத்தேனியம் ஈரொட்சைட்டு ஆகியவற்றிற்கு உலகச் சந்தையிலுள்ள பெறுமதியை உணர்ந்து கொண்ட சில அரசியல்வாதிகளும் பேரினவாத அதிகாரிகளும் கொக்குத் தொடுவாயிலிருந்து திரியாய், யான் ஓயா ஆற்றுமுகம் வரையிலுள்ள கடற்கரைப் பிரதேசத்தைசிங்கள மயமாக்குவதில் ஆர்வங் கொண்டனர். மேலும் தைத்தேனியக் கனிமங்களை பிரித்துப் பெறுவதற்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கக் கூடிய நன்நீர் வசதி அத்தியாவசியமானது. இவ்வசதி யான் ஓயா ஆற்றை அண்டிய நீரிறைக்கும் நிலையமொன்றினூடாகவே கிடைத்துக் கொண்டிருந்தது. இந்நிலையம் தமிழ்ப் போராளிகளால் சேதப்படுத்தப்பட்டதால் உற்பத்தியில் பாதிப்பு உண்டாயிற்று. ஆகவே திரியாய்க்கு வடமேற்காக யான் ஓயா ஆறு பாயும் பிரதேசத்தையும் தனிச்சிங்கள மயமாக்குதல் மூலமே தைத்தேனியக் கனிமப் பொருள் உற்பத்திக்கும், எதிர்காலத்தில் உருவாகக் கூடிய தைத்தேனியம் ஈரொட்சைட்டு தொழிற்சாலைக்கும் இன்றியமையாத நன்நீர் வசதியை பெறலாம் என்ற கருத்து வலுப்பெற்றது. இந்நிலையில் புல்மோட்டை கடலோரமும், கடலடியிலும் காணப்பெறும் தைத்தேனியக் கனிமங்கள் உண்மையாகச் சிங்கள இனத்திற்கே உரிமையானது என்ற ஒரு கருத்தும் முன்வைக்கப்பட்டது. மத்தியமலை நாட்டில் சிங்களப் பகுதியினூடாக ஓடிவரும் மகாவலி கங்கை தைத்தேனியக் கனிமங்களை அப்பகுதிகளிலிருந்து அரித்துக் கொண்டு வந்து திருகோணமலைக் கடலில் சேர்க்கிறதென்றும் அதன் காரணமாகத்தான் அக்கனிமங்கள் புல்மோடையில் படிகின்றன என்றும் ஆகவே சிங்கள இனத்திற்கே இக்கனிமங்கள் மீது உரிமையுண்டென்றும் கூறப்பட்டது.

(இக்கருத்து தைத்தேனியம் ஈரொட்சைட்டு ஆலை ஒன்றை அமெரிக்க உதவியுடன் நிறுவ முயற்சி செய்து வந்த ஒருவரால் அறிக்கையொன்றில் கூறப்பட்டதாகும்.) இது இவ்வாறிருக்க, 1989ம் ஆண்டு தொடக்கம் பிரேமதாச அரசு மீது உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் (I. M. F.) ஆகியன ஏற்படுத்திய கெடுபிடியின் காரணமாக அரச கூட்டுத் தாபனங்களைத் துரிதமாக தனியார் மயப்படுத்த வேண்டிய தேவை உண்டாயிற்று. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலையை இயக்கி வந்த அரச கனிப் பொருட் கூட்டுத்தாபனத்தை தைத்தேனியம் ஈரொட்சைட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல்தேசிய நிறுவனம் ஒன்றிற்கு விற்கும் முயற்சிகள் தொடங்கின. இதன்படி அரச கனிப் பொருட் கூட்டுத்தபனத்தை (State Mineral Sands Corperation) வாங்கும் வெளிநாட்டு நிறுவனம் தைத்தேனியம் ஈரொட்சைட்டு ஆலை ஒன்றை நிறுவி ஏற்றுமதியிலும் ஈடுபடும். புல்மோட்டையில் கிடைக்கும் தைத்தேனியக் கனிமத்திலேயே உலகில் மிக அதிக வீதம் தைத்தேனியம் ஈரொட்சைட்டு கிடைப்பதாலும் தைத்தேனியம் ஈரொட்சைட்டின் விலை 2300 அமெரிக்கடாலருக்கு மேல் என்பதாலும் அதனை மிக இலாபகரமாக இலங்கையில் உற்பத்தி செய்யலாம் எனக் கூறப்பட்டது. இதில் முதலிடும் பல்தேசிய நிறுவனத்திற்கு துரிதமாக வளர்ந்து வரும் ஆசியச் சந்தையை இலகுவாக கைப்பற்றக் கூடிய வாய்ப்பு உண்டு. இவ்வாலையை தெற்கில் சிங்களப்பகுதியில் அமைத்து, கடல் மூலம் அதற்கான கனிம மண்ணை புல்மோட்டையிலிருந்து கொண்டுவரலாம் என்ற கருத்தும் வலுப்பெற்றிருக்கிறது. இவ்வாலையை அமைப்பதற்கான உத்தேசச் செலவு 10.15 கோடி அமெரிக்கடொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் இதற்கு இரு தடைகள் உள்ளன. ஒன்று புல்மோட்டை திரியாய் பகுதியில் காணப்படும் விடுதலைப் புலிகள் நடமாட்டம். இரண்டு இவ்வாலையில் முதலிடும் பல்தேசிய நிறுவனம் அரசியல் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்திக் கொள்வதற்காக உள்ளூரில் எதிர்பார்க்கும் உண்மைப்பண முதலீடு (Equity Capital). புல்மோட்டை திரியாய் பிராந்தியத்தில் உள்ள யுத்த நிலை காரணமாக பங்குச் சந்தையில் இவ்வாலைக்கான பங்குகளை பொது மக்கள் வாங்கத் தயங்குவர். பொதுமக்கள் பல இலட்சம் பேர் தம் சிறு சேமிப்புகள் மூலம் இப்பங்குகளை வாங்காத பட்சத்தில் தனது முதலீட்டிற்கும், தனக்கேயுரிய தைத்தேனியம் ஈரொட்சைட்டு உற்பத்திக்கான தொழில் நுட்பத்திற்கும் அரசியல் பாதுகாப்பில்லை, எனக் காணும் போது பல்தேசிய நிறுவனம் பின்வாங்கும். இதனால் கூட்டுத்தாபன விற்பனையின் மூலமும் இவ்வாலை நிர்மாணத்தினூடாகவும் பல கோடி ரூபாய்களை சிங்கள அரசியல் தலைவர்களும் (மிக மேலிடம் உட்பட) சம்பந்தப் பட்ட அதிகாரிகள் தரகர்கள் ஆகியோரும் பெறமுடியாமற் போயுள்ளது.


இந்தப் பின்னணியிலேயே புல்மோட்டையை உள்ளடக்கிய வெலிஓயா மாவட்ட சிங்களக் குடியேற்ற வேலைகள் பிரேமதாசா அரசின் கீழ் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளமையை நாம் நோக்க வேண்டும். கொக்குத் தொடுவாயிலிருந்து, திரியாய் வரையுள்ள கடற் கரைப் பிரதேசமும், யான் ஓயா ஆற்றை அண்டிய உட் பிரதேசத்தையும் (interior) முற்றாகச் சிங்களக் குடியேற்றப் பிராந்தியமாக்குவதன் மூலமே தைத்தேனியம் ஈரொட்சைட்டு ஆலை நிறுவுவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என பிரேமதாச அரசு கருதுகிறது. இம்முயற்சியில் ஆர்வம் கொண்டுள்ள பல்தேசிய நிறுவனம் அமெரிக்காவைச் சேர்ந்ததால் அமெரிக்க அரசாங்கமும் குடியேற்ற முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்க வருங்காலத்தில் முயற்சிக்கலாம். வருங்காலத்தில் இன்னுமொரு தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த (சீனி, சீமெந்து, காகிதம் போன்ற) எந்தவொரு தொழிற்சாலையும் மற்றைய தேசிய இனங்கள் பெரும்பான்மையாகவுள்ள வடகிழக்கு மாகாணத்தில் உருவாகக் கூடாது என்னும் எண்ணத்திலேயே, வெலி ஓயா புல்மோட்டை பிராந்தியம் வடமேல் மாகாணத்துடன் நிர்வாக ரீதியாக இணைக்கப்பட்டுவருகிறது; சிங்கள மயமாக்கப்பட்டு வருகிறது. முல்லைத்தீவின் ஒருபகுதியையும் திருமலையின் ஒருபகுதியையும் இணைத்து, கொக்குத் தொடுவாயிலிருந்து புல்மோட்டை வரையிலான கடற்கரைப் பிராந்தியத்துடன் ஒரு தனிச் சிங்கள மாவட்டத்தை (வெலி ஓயா - வகல்கட) உருவாக்குவதன் மூலமே தைத்தேனியம் ஈரொட்சைட்டு ஆலைத்திட்டத்தை சிங்கள இனத்திற்காக மட்டும் நடைமுறைப்படுத்தலாம் என எண்ணுகிறது பேரினவாத அரசு; வடகிழக்கை துண்டிப்பதற்கான முயற்சியில் முழுமையாக ஈடுபடுகிறது. பேச்சுவார்த்தை என்பது இவ்வேலையை முடிக்க அவகாசம் தேட அரசு ஆடும் நாடகமே.

**- பிரம்மர**

## தோப்பில் முகம்மது மீரானின்



ஒரு கடலோர கிராமத்தின் கதை




தோப்பில் முகம்மது மீரான் தமிழுக்கு அறிமுகமாகியுள்ள ஒரு புதிய நாவலாசிரியர். இவரது முதல் நாவல் ஒரு கடலோரக் கிராமத்தின் கதை. இதன் முதல் பதிப்பு 1989 இல் வெளி வந்தது. குறுகிய காலத்துள் மூன்று பதிப்புகள் வெளி வந்து விட்டன. நான்கு பல்கலைக் கழகங்களில் பாடநூலாகவும் வைக்கப் பட்டுள்ளது.

முஸ்லிம்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு தமிழில் வெளிவந்துள்ள முதலாவது யதார்த்த நாவல் இது. தமிழ்நாடு – கேரள எல்லைப் புறக் கிராமமான தேங்காய்ப் பட்டணம் இதன் களம். முதலாவது உலக யுத்தத்தை அடுத்த காலப்பகுதியில் கதை நிகழ்கிறது. பாரம்பரிய நம்பிக்கைகளும் அறியாமையும் நிலவிய முஸ்லிம் சமூகத்தின் துன்ப துயரங்களும், பழமைக்கும் புது மைக்கும் இடையிலான போராட்டங் களும் நாவலின் கரு. முகம்மது மீரான் வளமான மலையாள நாவல் இலக்கியத் தின் யதார்த்த மரபைத் தன் நாவலில் திறமையாகக் கையாண்டிருக் கிறார்.

சமீபத்தில் தமிழில் வெளிவந்த முக்கியமான மிகச் சில நாவல்களுள் இதுவும் ஒன்று.

தமிழ் பேசும் முஸ்லிம்களின் சமூக வாழ்வை யதார்த்தமாகச் சித்திரிக்கும் தமிழ் நாவல் இல்லை என்ற குறையை இது நீக்கியுள்ளது. இதன் மரபு இனித் தொடர வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



நிறப்பிரிகை என்ற பத்திரிகையில் வெளிவந்த தோழர் கத்தார் அவர்களின் கலைஞனும், அரசியலும் என்ற பேட்டியை "சரிநிகர்" பத்திரிகை மறுபிரசுரம் செய்திருந்தது. எனக்கு அதிலுள்ள கருத்துக்கள் பலவற்றிடமிருந்து மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், அதில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுபற்றியே இங்கே கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அந்தக் கேள்வியும், அதற்கான கத்தாரின் பதிலும் முழுமையாக இங்கே மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.

*உலகம் பூராவிலும் வரலாறு முழுமையும் கட்சிக்கும் கலாசார அமைப்பிற்குமிடையே உறவு எப்போதுமே சரியாக இருந்ததில்லை. இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் சொல்ல முடியும். லெனினுக்கும் கார்க்கிக்கும் இடையே இருந்த பிரச்சினைகள், ஸ்டாலின் காலத்தில் ஏராளமான எழுத்தாளர் கள் தொல்லைக்குள்ளாக்கப்பட்டது. சீனத்தில் அய்கி ங்கின் பாடல்கள் தடைசெய்யப்பட்டது கியூபாவில் பாடி ல்லா சிறையில் அடைக்கப்பட் டது.. இப்படி கட்சியுடன் உங்களது அனுபவம் எப்படி? உலகம் பூராவும் இத்தகைய பிரச்சினைகள் இருந்ததற்கான பொதுவான காரணங்களாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?*

கவையான ஆனால் சிக்கலான கேள்வி. அறிவாளிகளுக்கும் கட்சிக்குமிடையேயான பொதுவான பிரச்சினைதான் நீங்கள் எழுப்பியுள்ளது. வரலாறு முழுமையும் பாருங்களேன். அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லோரையும் அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளவே முயல்கிறது, வைத்துக் கொள்கிறது. ஆனால், அதே சமயத்தில் இவ்வாறு கட்டுப்படுத்தப் படாத மக்கள் கலையும் இலக்கியமும் கூடவே இருக்கத்தான் செய்கின்றன. இதனையும் ஆட்சியாளர்கள் விட்டு வைப்பதில்லை. மக்கள் வடிவங்களுக்குள் தங்கள் உள்ளடக்கத்தை இராமாயணம்/மகாபாரதம் போன்றவை மூலமாகத் திணித்து விடுகின்றனர். எனினும் இந்த அரசமைப்பிற்கெதிரான போராட்டங்களும் கலை இலக்கியங்கள் மூலமாகத்தான் வெளிப்படுகின்றன.

ஒரு புரட்சிகர அரசு உருவாகும் போதும் இந்தப் பிரச்சினை எழுந்து விடுகிறது. அதுவும் கலைஞர்களைப் புரட்சிகர நோக்கிற்காகக் கட்டுக்குள் வைக்க விரும்புகிறது. கட்சியா, கலாசார இயக்கமா, எது முக்கியம்? ஆந்திரத்தின் அக்கினிக் குஞ்சு என்றெல்லாம் என்னை விளம்பரப் படுத்தியுள்ளீர்கள். ஆனால் இந்த நிகழ்ச்சியைக் கட்சிதானே ஏற்பாடு செய்ய முடிந்திருக்கிறது? கட்சியே முன்னோடிப்படை, கட்சியே எல்லாவற்றையும்விட உயர்ந்தது.

கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் வேறுபாடுகள் இருக்கலாம், முரண்கள் இருக்கலாம், ஆனால் இவை அனைத்தும் நட்பு முரண்பாடுகளே. கார்க்கிக்கும் லெனினுக்குமுள்ள முரண்பாடு அப்படிப்பட்டதுதான். உண்மையில் இந்த முரண்பாடு கொள்கைக்கும் நடைமுறைக்கும் சொல்லுக்கும் செயலுக்குமுள்ள முரண்பாடுதான். ஆயிரமாயிரம் விஷயங்களைச் சொல்லிவிடலாம். சொன்னதைச் செய்து காட்ட வேண்டும்.

ஆந்திராவில் இந்தப் பிரச்சினையை நாங்கள் பெரிதும் தீர்த்துவிட்டோம். நடைமுறையின் மூலமாகவே நாங்கள் இதைத் தீர்த்திருக்கிறோம். எப்போதுமே நட்பு முரண்கள் நடைமுறையில்தான் தீர்க்கப்படுகின்றன.

எழுத்தாளன் அகவயமாய் வாழ்பவன் புரட்சியாளனோ புறவயமாய் வாழ்வைப் பார்ப்பவன். புத்தகங்களைக் குவித்துவைத்துக் கொண்டு குழம்பிக் கிடக்கும் புத்திஜீவிகள் நிறையப் பேரை நான் பார்த்திருக்றேன். ஒரு குடிசை, ஒரு தொழிற்சாலை இங்கெல்லாம் நீ போயிருக்கிறாயா? போட்டிருக்கும் சட்டையைக் கூட உன்னால் தியாகம் செய்ய முடியாது. ஆனால் இல்லாத தத்துவமெல்லாம் பேசுவாய். நக்சல்பாரிகளை விமர்சிப்பாய். தமிழரசன் மக்களைத் திரட்டாமல் கொள்ளையடித்தார் என்பாய். இதைச் சொல்ல உனக்கு என்ன தகுதி இருக்கிறது? தமிழரசன் ஒரு மாபெரும் தியாகி. இந்தத் தியாகங்களை நாம் முதன்மைப் படுத்த வேண்டும்.

கார்க்கி பெரிய ஆளாக இருக்கலாம். ஆனால் இறுதியில் அவர் கட்சிக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். லெனின்தான் இறுதியில் வென்றவர்.



# கத்தாரிடம் சில கேள்விகள்

**- ராஜன்**

கேள்வி கேட்பவர் சரியான ஒரு கேள்வியை, அதாவது புரட்சிக்குப்பிந்திய சமுதாயங்கள் முகம் கொடுத்த ஒரு பிரச்சினையைப்பற்றிக் கத்தாரிடம் கேட்டார். ஆனால் கேள்வி கேட்பவரிடமே கேள்விபற்றி சரியான ஒரு பார்வை இல்லாததால் கத்தார் தவறான ஒரு பதிலைத் தருவதற்கு அனுமதித்தார், மேலும் கேள்வி கேட்பவர் அந்தக் கேள்வியை சரியான முறையில் குறிப்பிட்ட பிரச்சினையை நோக்கிமைப் படுத்தவும் முனையவில்லை. கட்சிக்கும், கலாசார அமைப்பிற்குமிடையேயான உறவு என்று கேள்வியைத் தொடங்கியவர், லெனினுக்கும் கார்க்கிக்கும், ஸ்டாலின் காலத்தில்.... என்று உதாரணங்களை மேற்கோள் காட்டுவதன் மூலம் பிரச்சினையின் மையத்தை தனிநபர்களை நோக்கித் திசை திருப்புகிறார். லெனின், ஸ்டாலின் போன்ற தலைவர்களின் உதாரணங்களிற் கூடாக அன்று கட்சிக்கும், கலாசார அமைப்பிற்குமிடையேயான உறவை ஓரளவு விளக்கலாம் தான். ஆனால் அதைவிட கட்சிக்கும், கலாசார அமைப்பிற்குமிடையே சரியான உறவு நிலவவில்லை என்று மட்டுமே சொல்வது போதுமானது. இது பதில் சொல்லுபவர் எம்மைக் கேட்கப்பட்டகேள்வியில் இருந்து வேறுதிசைக்கு அழைத்துச் செல்லாமல் இருக்க உதவும்.

சிக்கலான கேள்வியொன்று சரியாகவே பதில் சொன்ன கத்தார், அறிவாளிக்கும், கட்சிக்கும் இடையேயான பொதுவான பிரச்சினைதான் என்று கூறுவதன் மூலம் ஒரு சிக்கலான பிரச்சினையை எவ்வளவு எளிமையாக தான் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதைக் காட்டிவிடுகிறார். ஒவ்வொரு பிரச்சினையிலும் இவ்வாறு எளிமையாக முரண்பாடுகளைப்பார்ப்பது தவறான அணுகுமுறை, கட்சிக்கும், கலாசார அமைப்பிற்கும் இடை யிலான உறவு என்பதில் பல தரப்பட்ட முரண்பாடுகள் ஒன்றோடொன்று சிக்கலான வடிவில் முரண்படுகின்றன, உறவுகொண்டுள்ளன. அதில் அறிவாளிக்கும் - கட்சிக்கும் இடையேயான முரண்பாடு ஒன்றும் நிலவுகின்றது. அத்துடன் கலைஞர்களுக்கும் - கட்சிக்கும், கட்சியின் அணுகு முறைக்கும்-கலாசார அமைப்புக்களின் அணுகுமுறைக்கும், கட்சியின் அமைப்புவடிவத்திற்கும்-கலாசார அமைப்புக்களின் அமைப்புவடிவத்திற்கும், பலதரப்பட்ட தளங்களில், முனைகளில் போராடுகின்ற கட்சியின் தேவைக்கும்-கலாசாரத் தளத்தில் அதன் முனைகளில் மட்டுமே போராடுகின்ற தேவையிலுள்ள கலாசார அமைப்பிற்கும், கலை கலாசார அமைப்பிற்கும்– சமுதாயத்தில் நிலவுகின்ற ஏனைய நிறுவனங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுவதை உதாரணமாக காட்டலாம். மேலே கூறப்பட்ட முரண்பாடுகள், கட்சிக்கும், கலாசார அமைப்பிற்கும் இடையேயான உறவு எவ்வளவு சிக்கலான வடிவில் நிலவுகின்றது என்பதை எடுத்துக் காட்டவே கூறப்பட்டது. இவ்வாறு கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் இடையிலான உறவு பலதரப்பட்ட முரண்பாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது. அத்துடன் ஒவ்வொரு கட்சியும், கலாசார அமைப்பும் எந்தெந்த நிலைமைகளில் இருக்கின்றதோ, அந்தந்த நிலைமைகளிற்கேற்ப இந்த முரண்பாடுகள் கட்சி, கலாசார அமைப்பு ஆகிய இரண்டிலொன்று அழியும் வரைநிலவும், எந்த முரண்பாடுகளையும் வெற்றி கொள்வதில்தான் கட்சியும் சமுதாயமும் முன்னோக்கிச் செல்கிறது. அதே போல் தான் இந்த முரண்பாடுகளையும் கட்சி வெற்றிகொள்ள வேண்டும். வெற்றி கொள்வதன் மூலம் மட்டுமே ஒரு கட்சி தன்னை ஒரு புரட்சிகரக் கட்சியாக நிலைநிறுத்த முடியும்.

" எழுத்தாளன் அகவயமாய் வாழ்பவன், புரட்சியாளனோ புறவயமாய் வாழ்பவன்" என்கிறார் கத்தார். அகவயமான வாழ்விற்கும், புறவயமான வாழ்விற்கும் இடையிலான உறவுபற்றி கத்தாருக்குத் தெரியாதா? புரட்சியாளர்கள் எழுதுவதில்லையா? எழுத்தாளர்கள் எனும்போது கதாசிரியர்கள், தத்துவஞானிகள், வரலாற்றாசிரியர்கள், கட்டுரையாளர்கள், விமர்சகர்கள், ஆய்வாளர்கள் இவ்வாறு பலவகைப் படுத்தலாம். இவர்களை அகவய வாழ்வு வாழ்பவர்கள், புறவய வாழ்வு வாழ்பவர்கள் என எவ்வாறு · பிரிப்பது? 'மரபுமாக்ஸியர்கள்' அகவாழ்வு என்றால் விஞ்ஞான பூர்வ மற்றது, புறவாழ்வு என்றால் விஞ்ஞான பூர்வமானது என்றும் கருதுகிறார்கள். இக்கருத்து சரியானதல்ல, அகவாழ்வு, புறவாழ்வு இரண்டிலும் விஞ்ஞான பூர்வ அணுகுமுறை இருக்க முடியும், அத்துடன் புரட்சியாளனோ, எழுத்தாளனோ, எந்த ஒரு மனிதனுமோ அகவாழ்வு, புறவாழ்வு இரண்டையும் வாழவேண்டும். அகவாழ்வை ஒரு மனிதன், வாழாமல் 'வாழுவதென்பது' மனிதன் இயந்திரமாக மாறுவதாகவே அர்த்தப்படும். இந்தப்பந்தியில் கத்தார் கேட்ட கேள்வியை விட்டு வெகுதூரம் விலகிச் சென்று விடுகிறார்.

"ஆந்திராவில் இப்பிரச்சினையைப் பெரிதும் தீர்த்துவிட்டோம்" என்கிறார் கத்தார். கலாசாரப்புரட்சியே நடக்காத ஒரு பிரதேசத்தில் மேலும் இந்த முரண்பாடு மேல்நிலைக்கு வராத ஒரு நிலைமையில், இந்த முரண்பாட்டைத்தாம் ஆந்திராவில் தீர்த்து விட்டதாகச்சொல்வதை நாம் எவ்வாறு புரிந்து கொள்வது?...... பத்துலட்சம் மக்களுக்கு முன்னால் நின்று ஒரு புரட்சிகரகலைஞன் பாடுகிறான் என்றாலோ அந்த ஏற்பாட்டைக்கட்சிதான் செய்தது என்றாலோ கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் இடையிலான முரண்பாடு மறைந்ததாக அர்த்தப்படுமா?

"எனினும் இந்த அரசமைப்பிற்கெதிரான போராட்டங்களும் கலை இலக்கியங்கள் மூலமாகத்தான் வெளிப்படுகின்றன." என்கிறார் கத்தார். இது கலை இலக்கியம்பற்றிய மிகையான பார்வையாகும். அரசமைப்பிற்கெதிரான போராட்டங்களில் நிலைமைகளிற்கேற்ப உரிய பங்கைக் கலை இலக்கியம் ஆற்ற முடியும். சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் கலை இலக்கியம் தனக்கே உரிய பங்கை ஆற்ற முடியும் என்பதே சரியானது.

பிரச்சினைகளை நட்பு முரண்பாடுகள், பகை முரண்பாடுகள் என்று மட்டுமே கத்தார் பார்க்க முனைகிறார். முரண்பாடுகள் நட்பு முரண்பாடாகவோ, பகைமுரண்பாடாகவோ இருப்பதென்பது அந்த முரண்பாட்டை அணுகும் முறைபற்றிய பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டது. ஆனால் அந்த முரண்பாடானது குறிப்பிட்ட பிரச்சினையில் எந்தப் பாத்திரத்தை வகிக்கின்றது என்பதை நட்பு முரண்பாடோ, பகைமுரண்பாடோ என்பது தீர்மானிக்கமாட்டாது. சமுதாயத்தை முன் தள்ளும் ஒரு பிரச்சினையில் அல்லது சமுதாயத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் ஒரு பிரச்சினையில் மேலாதிக்கம் பெற்ற முரண்பாடு, நட்பு முரண்பாடாகவோ பகை முரண்பாடாகவே இருக்கலாம். மேலும் கட்சிக்கும் கலாசார இயக்கத்திற்கும் இடையிலான உறவு என்ற பிரச்சினையில் உள்ள முரண்பாடுகள் புரட்சிக்குப் பின்பு ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் சமுதாயவளர்ச்சியில் காத்திரமான பங்கை ஆற்றின. இவை நட்பு முரண்பாடுகள் என்பதால் இவற்றை ஒதுக்கித்தள்ளிவிடமுடியாது. .

"நட்பு முரண்பாடுகள் நடைமுறையில் தான் தீர்க்கப்படுகின்றன" என்கிறார் கத்தார். பகைமுரண்பாடுகளும் நடைமுறையில் மட்டும் தான் தீர்க்கப்படுகின்றன என்பதே உண்மை. அத்துடன் முரண்பாடுகளைக் கண்டறிந்து அதைத் தீர்ப்பதற்கான சரியான நடைமுறைகளிற் கூடாக மட்டுமே முரண்பாடுகள் தீர்க்கப்படுகின்றன. முரண்பாடுகளை தீர்ப்பதற்காக உருவாக்கப்படாத நடைமுறைகள் பிரச்சினைகளையோ, அல்லது முரண்பாடுகளையோ தீர்க்க மாட்டாது.

"கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் வேறுபாடுகள் இருக்கலாம்" என்கிறார், கத்தார், இதில் 'இருக்கலாம்' என்பது தவறு, இருக்கும் என்பதே உண்மை, கட்சி கலாசார அமைப்பு இரண்டிற்கும் இடையில் முரண்பாடுகள் வேறுபாடுகள் என்பன கட்சி அல்லது கலாசார அமைப்பு சமுதாயத்தில் இருக்கும்வரை நிலவும்.

"கட்சியே முன்னோடிப்படை எல்லாவற்றையும் விட உயர்ந்தது" என்கிறார் கத்தார், இதை ஒரு கட்சி அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. சமுதாயத்தின் பிரச்சினைகளை முகம்கொடுப்பதிலும், சமுதாயத்தை முன்னே வழிநடத்திச் செல்வதில் முன்னோடியாகத் திகழ்வதிலும், உயர்ந்த கம்யூனிச பண்புகளை உடையதாக விளங்குவதிலுமே இது நிரூபிக்கப்படுகிறது. மாறாக வெறுமனே இதை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பதால் ஒரு கட்சி சமுதாயத்தைவிட, மக்களைவிட தன்னை மேலே, உயர, உயர்த்த முயற்சிக்கிறது என்பதே இதன் அர்த்தம்.

கட்சிபற்றிக் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு இருந்தாற்போல் அரசு பற்றிய ஒரு பதிலைக் கத்தார் சொல்கிறார். அதாவது, "அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லோரையும் அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவே முயல்கிறது" என்கிறார் கத்தார். இதற்குள் ஏதோ ஒரு சரியாகவே உணர்கிறார் கத்தார். ஆனால் அவர் தொடர்ந்து சொல்லும் கருத்தானது அரசு, கட்சி, கலாசார அமைப்பு சம்பந்தமாக அவரிடம் மரபான கருத்துக்களே இருக்கின்றன என்பதைக் காட்டிவிடுகிறது. அவரால் அதைக் கடக்க முடியாமலே இருக்கிறது.

தொடர்ந்து, "ஒரு புரட்சிகர அரசு உருவாகும் போதும் இந்தப்பிரச்சினை எழுந்துவிடுகிறது. அதுவும் கலைஞர்களைப் புரட்சிகர நோக்கிற்காகக் கட்டுக்குள் வைக்க விரும்புகிறது. கட்சியா, கலாசார இயக்கமா எது முக்கியம்" என்கிறார் கத்தார். புரட்சிகர கட்சியைப் பற்றும் அரசையே புரட்சிகர அரசு என கத்தார் கருதுகிறார். பின்பு, கேட்கப்பட்ட கேள்விக்கு, தொடர்ந்து கட்சிக்கும் கலாசார அமைப்பிற்கும் இடையிலான உறவை விளக்குவதிலேயே அவர் முனைகிறார்.

'புரட்சிகர அரசையும், கட்சியையும் ஒன்றாகவே கருதிவிட்டாரா கத்தார்?, அரசுக்குச் சேவை செய்யக்கூடாது என்ற பாணியில் முதல் பந்தியில் பதில் கூறிய கத்தார் புரட்சிகர அரசு என்பதை முன்னிறுத்தி அதற்கு புரட்சிகர நோக்கிற்கான கலைஞர்கள் கட்டுக்குள் இருக்க வேண்டும் என்கிறார்...? இதைக்கட்சியா கலாசார இயக்கமா என்ற கேள்வியைக் கேட்பதன் மூலம் புரட்சிகரக் கட்சியே அரசைக் கைப்பற்றுவதால் கலாசார இயக்கம், புரட்சிகரகட்சியின் துணையாக 'புரட்சிகர அரசின்' கட்டுக்குள் வைப்பதை ஏற்க வேண்டும் என்கிறார்? கத்தார் ஒரு தெளிவான பதிலை முன்வைக்கவில்லை. அவர் மீது திட்டவட்டமாக ஒரு விமர்சனத்தை முன்வைக்க முடியாதுள்ளது இதனாலே தான். ஆகவே திட்டவட்டமாக ஒரு நிலைப்பாட்டை முன்வைப்பதன் மூலம் ஒரு விவாதத்தைக் கத்தாருடனோ, அல்லது நிறப்பிரிகை, சரிநிகர் போன்ற பத்திரிகைகளுடனோ அல்லது அரசு, கட்சி, கலாசார இயக்கம்பற்றி மாறுபட்டுள்ள கருத்துக்கள் உள்ளவர்களுடனோ ஒரு விவாதத்தை முன்னெடுத்தல் ஆரோக்கியமானது.

*இன்னும் வரும்*

# அரசியல் வரலாறு என்பது கள்ள உறுதி எழுதுவதோ 'குதிரை' ஓடுவதோ அல்ல!

என். சிவானந்தன்.

மெல்லத் தமிழினி என்ற தலைப்பில் எழுதப்படும் விஷயங்களில் "இலங்கை வரலாறு" பற்றி எழுதப் பட்டுள்ள விடயங்களைப் படிக்கும் போது அந்த நாட்களில் "சுதந்திரன்" படித்த ஞாபகங்கள் வந்தன. காசி. ஆனந்தன் அந்த நாட்களில் "சலுசல" என்பது "மலசல" என்பது போல் உள்ளது என்று எழுதித் தள்ளினார். கோவை மகேசரும் பிரசுரித்தார். சிங்கள மொழி யில் உள்ள சொற்கள் தமிழ் மொழியில் வேடிக்கையான வைகளாக இருக்கலாம். அதே போல் தமிழில் "புக்கை" "பை" என்பன சிங்களவர்களுக்கு சிரிப்பு மூட்டும் சொற்கள்தான், இப்படியான "மதவாச்சி, அத்தனகல, விளக்கங்களை துவேஷமான பிரசாரங்களாகத்தான் கருத வேண்டியுள்ளது. இவற்றினால் எதையும் சாதிக்க முடியாது. இப்படி எழுதுவதன் மூலம் தமிழை வளர்க்கவோ காத்துக் கொள்ளவோ முடியாது. அழித்துக் கொள்ளத்தான் முடியும்.

சிங்களவர்கள் எழுதுவது அனைத்தும் தப்பு, தவறு என்று கூறிக் கொண்டிருப் பதில் எதுவித அர்த்தமும் கிடையாது. அறிவுடமையும் ஆகாது. யாழ்ப்பாணத்துக்குச் சரியான வரலாறு இது வரை யாரும் எழுதியது கிடையாது. ஏன் என்று இதுவரை புரியவில்லை. யாழ்ப்பாணத்த வர்கள் தங்கள்ள கற்றறிந்த மேதாவிகள் என்று சுய தம்பட்டம் அடிப்பதில் எதிர்கால சந்ததிகளுக்கு எதுவித பயனும் விளையப் போவதில்லை. விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களுடனும் மொழியல், சாசனச் சான்றுகளுடனும் முதலில் யாழ்ப்பாண வரலாறை எழுதி சிங்களவர்கள் அறியச் செய்தால் அவர்களின் மறுப்புக்களை விளக்க முடியும். அதை விடுத்து யாழ்ப்பானம் தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதால் தமிழ் பேசுபவர்கள்தான் காலம் காலமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்று அரசியல்வாதிகள் பாணியில் பலத்த சத்தத்தில் கூறிப் பயன் கிடையாது.

இந்த வரலாற்றுச் சிக்கல்களின் அடிப்படையில் பிரச்சினைகளை நாம் அணுகுவதாயின் இரு சாராரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதொரு வரலாறு அவசியமாகும். இலங்கையில் தமிழர் பற்றிய தகவல்களை அறிய மகாவம்சம், சூளவம்சம், போன்ற சிங்களவர்களால் எழுதப்பட்ட நூல்களையே தேடி ஓட வேண்டியுள்ளது. இந்த லட்சணத்தில் சிங்களவர்கள் எழுதுவது தப்பு, தவறு என்று கூறி தமிழ்ப் பேரின வாதத்துக்கு மெருகூட்டுவதில் எதுவித பயனும் விளையப் போவதில்லை.

பௌத்தர்களாக இருந்த வர்கள் சிங்களவர்கள் மட்டுமல்ல. தமிழர்களும் ஒரு காலத்தில் பௌத்தர்களாக வாழ்ந்தனர். இது இந்திய வரலாற்றில் காணப்படுகிறது. இலங்கையில் பிரச்சினை எதுவென்றால் பௌத்தத்துக்கு முன்னர் சிங்களவர்கள் இந்துக்களாக இருந்தனர் என்றோ தமிழர்களும் சிங்களவர்களும் சம காலத்தில் பௌத்தர்களாக இருந்தனர் என்றோ தமிழர் களும் சிங்களவர்களும் ஒத்துக் கொள்வது கிடையாது என்பதேயாகும். தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி (மூலம் வடமொழி) என பௌத்த காவியங்கள் சிறப்பானவை யாக வந்தமைக்கு காரணங் களை ஆராய்வது புத்தியுள்ள காரியமாகும்.

ஜீ. ஜீ. பொன்னம்பலம், அமிர்தலிங்கம் போன்ற "கிறிமினல் பிரக்கிராசிகள் கூறியதெல்லாம் சரித்திரச் சான்றுகள் அல்ல. அவர்கள் தங்கள் சுய மேதாவிலாசங் களுக்காக தூவேஷமாக புழுகியவற்றை நாம் ஏற்றுக் கொள்வது எமது வரலாற்றுச் சிக்கல்களை வளர்க்கவே உதவும். அரசியல் வரலாறு என்பது "கள்ள உறுதி" எழுதுவதோ "குதிரை ஓடுவதோ" அல்ல.


யாழ்ப்பாணத்தில் தமிழில் வழக்கு பேச முடியாது என்று புலம்பியவர்தான் அமிர்தலிங்கம். 1972 ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சியில் நடித்த கதை இது. தமிழர் களுக்கு தமிழில் நீதிமன்றத்தில் வாதாட முடியாது ஆங்கிலம்தான் தேவை என்றவர்கள் எப்படி தமிழ் ஈழத்தை நிர்வாகம் செய்வார்கள் என்று கூறியதே கிடையாது. ஆங்கிலம் போய் விட்டது என்பதற்கு காட்டிய அக்கறையில் பத்தில் ஒன்றைக் கூட தமிழில்தான் எழுதுவோம், படிப்போம் என்பதில் காட்டியிருந்தால் எமது சிக்கல்கள் எவ்வளவோ குறைந்திருக்கும்.

சிங்களவர்கள் சிங்களத்தில் எதையும் செய்யத் தயாராக உள்ளனர். தமிழர்கள் அப்படி எதுவும் செய்யும் உத்தேசம் இதுவரை கிடையாது. தமிழ் என்று புலம்புபவர்கள் தமிழில் தொழில் பார்ப்பது கேவலம் என்றே எண்ணுகிறார்கள். ஊரில் தமிழ் வாத்தி, தமிழ் பட்டதாரி ஆகியோருக்கு கிடைக்கும் மரியாதை தெரிந்திருக்கும் என்றே எண்ணுகிறேன். நடைமுறை யில் தமிழ் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு தமிழர்கள் மதிப்பு கொடுப்பதே கிடையாது. அப்படி இருக்க கொழும்பில் என்ன தமிழ் காக்க புறப்பட்டீர்களோ தெரியாது.

தமிழ் மொழி எப்போதும் பேரத்துக்குரிய சமாச் சாரமாகவே தமிழர்களால் கருதப்பட்டு வந்துள்ளது. கொழும்பில் உள்ள தமிழர் களில் எத்தனை பேர் யாழ்ப்பாணத்துக் கடிதங் களுக்கு தமிழில் முகவரி எழுதுகிறீர்கள் ? கடிதம் தொலைந்து விடும் என்று கருதினால் அது சுயநலமே ! தொடர்ந்தும் தமிழில் எழுதினால் கண்டிப்பாக தமிழ் பேசுபவர்களை அரசு வேலைக்கு அமர்த்தியே ஆக வேண்டும். இது நடைமுறைச் சாத்தியமான காரியம்.

வெள்ளையர்கள் தங்க ளுக்கு விசுவாசமாக வேலை செய்ய சில நூறு பேர் தேவைப்பட்டதற்காக யாழ்ப் பாணத்தில் சில பாடசாலைக்ளை நிறுவி தமக்கு சில வேலையாட்களை உற்பத்தி செய்தனர். இதனை பின்னாளில் தமிழ் அரசியல்வாதிகள் "கல்வி, செல்வம்" என்று புரட்டல் செய்தனர். எங்கள் பாடசாலைகளில் எங்கள் வரலாறே எங்களுக்கு கற்பிக்கப்படவில்லை. பருத்தித்துறையில் இருப்பவர் களுக்கு பூநகரி எங்கே இருக்கிறது என்றே தெரிய வில்லை. இதுதான் நாங்கள் படித்த "படிப்பு"

அங்கு ஆங்கிலம் படித்த "சூரர்கள்" இந்தக் கனடாவில் வெறும் "வாச்சர்" (செக்கியூறிற்றிகாட்) வேலைக் குத்தான் லாயக்கான வர்களாக இருக்கிறார்கள் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும் ? எனவே முதலில் தமிழர்கள் தமிழர் களாக வாழ முற்படட்டும். பின்னர் மற்றைய விமர்சனங்களை முன் வைப்போம்.




இலங்கையில் காணாமல் போனோர் அறிக்கையும் விவரத் தொகுப்பும் என்ற நூல் லண்டனில் இருந்து வெளிவந்துள்ளது. வடக்கு - கிழக்கு மற்றும் தென்னி லங்கை உட்பட ஏனைய பிரதேசங்களிலும் கடந்த சில ஆண்டுகளில் காணாமல் போனவர்கள் பற்றிய புள்ளி விவரங்கள், பெயர் விவரங்கள் இந்த நூலில் தொகுக்கப் பட்டுள்ளன. இலங்கையில் காணாமல் போனோரின் நண்பர்கள் (THE FRIENDS OF THE DISAPPEARED IN SRI LANKA) எனும் அமைப்பு இதனைத் தொகுத்துள்ளது.

தென்னிலங்கை அன்னையர் முன்னணியின் தகவல்கள், ஆவணங்களிலிருந்தும் வேறு மனித உரிமை நிறுவனங் களிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களிலிருந்தும் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் காணாமல் போனோரில் ஏறத்தாழ 2000 பேரின் முழு விவரங் களும் கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோரில் 200 பேரின் முழுவிவரங்களும் நூலிலுள்ளன. மொத்த மாக 60,000 பேருக்கு அதிகமானோரின் விவரங்கள் தொகுக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவிக்கிறது.

THE DISAPPEARED IN SRI LANKA
REPORT AND MATERIALS; பக்கங்கள்; 100; படங்களுடன்

வெளியீட்டாளர்கள்; THE FRIENDS OF THE DISAPPEARED IN SRI LANKA
BM BOX 3018
LONDON WC 1 N 3XX.

நன்றி - நூலகத்திட்டம்



## ஒழுக்கம் கற்க!

தங்களை ஆசிரியராகக் கொண்ட "சரிநிகர்" நவம்பர் 91 இதழ் 12 ஏட்டில் 2ம் பக்கத்தில் "மெல்லத் தமிழினி" என்ற தலையங்கத்தில் பெயரிடப்படாத நபர் எழுதிய கட்டுரையில் இறுதிப் பகுதியில் தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்துவதாக கூறும் கட்சிகள் இதுபற்றி ஒன்றும் கூறத் தேவையில்லையோ? அல்லது அதுதான் அவர்களின் ஒழுக்கமோ? என்று பல விமர்சனங்களின் பின் குறிப்பிடப்பட்டுள்ளது.


ஆளைத் தெரிந்தால் அவரின் ஒழுக்கம் தெரியும்.

இப்பகுதியில் வந்த விமர்சனம் கண்மூடித்தனமானது. சரிநிகரின் மேற்படி கட்டுரையாளர் ஏனைய பத்திரிகைகளையும் சற்றுப் புரட்டி என்ன நடக்கிறது என்பதை அறிய வேண்டும். பாராளுமன்றத்தில் கடந்த 25-09-1991 (செப்டெம்பர்) அவசரகாலச் சட்டத்தின் மீது த. வி. கூ. பாராளுமன்ற உறுப்பினர் திரு மாவை. சோ. சேனாதிராசா அவர்கள் இந்த விடயம் குறித்து பேசியுள்ளார். அவர்களின் பேச்சின் முழுப் பகுதியையும் இத்துடன் அனுப்பி வைக்கிறேன். இவ் உரையின் பல பகுதிகள் வீரகேசரி முற்பக்கச் செய்தியுட்படப் பல செய்தித் தாள்களில் வெளிவந்தன. தங்கள் பத்திரிகையிலும் இச் செய்தியை வெளியிடவும். கட்டுரையாளர்கள் ஏதாவது எழுதுவார்கள் சரியா தவறா என்று கண்டிப்பாக ஆசிரியர் சரிபார்க்க வேண்டும். விற்பனைக்காகவோ அல்லது மக்கள் மத்தியில் ஆதரவைத் தேடுவதற்கு தவறான செய்திகளை பிரசுரிப்பது இறுதியில் பத்திரிகையின் வீழ்ச்சிக்கு வழியமைக்கும். தங்களின் கவனத்திற்கு இதைத் தெரிவிக்கிறேன்.

எமது பாராளுமன்ற உறுப்பினர் இதுபற்றி தங்களுக்கு எழுதும் படி கூறினார், எனக்கும் மேற்படி பத்திரிகை வருவதால் இக்கருத்தைத் தெரிவிக்கிறேன்.

த. முகுந்தன்.

## வாசகர் செ(ா)வ்வடி



இதிலிருந்து நான் ஒன்றைக் கவனிக்கின்றேன். அதாவது, நாம் படையினரைக் குறை கூறுவதில் பிரயோசனமில்லை. அரசாங்கத்தின் கொள்கையையே நான் கண்டிக்கின்றேன். ஒரு காலகட்டத்தில் ரீ. என். ஏ. ஐ அழிப்பதென்ற பேரில் எல். ரீ, ரீ. ஈ. யினரை பயன்படுத்தியதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது ஈ. பீ. டி. பீ. 'புளொட்,' 'ரெலோ' போன்ற இயக்கங்களைத் தாங்கள் எல்.ரீ.ரீ.ஈ. யினருக்கு எதிராகப் பயன்படுத்துவதாகச் சொல்லுகிறார்கள். விடுதலைக்காகப் போராடி ஆயிரமாயிரம் உயிர்களைப் பலி கொடுத்ததற்குப் பின்னர் இத்தனை பழிச்சொல் எங்கள் சமுதாயத்திற்கு ஏற்பட வேண்டுமா? எங்கள் விடுதலை இயக்கங்கள் யாருடைய கையாளாகவும் அவர்களது சதிக்குப் பயன்படவேண்டுமா? என்று தான் நான் கேட்க விரும்புகின்றேன். இது உண்மையா என்றுதான் நான் கேட்க விரும்புகின்றேன்.

## பெண்விடுதலைக்கு முழுக்கா?


ஆரம்பத்தில் வந்த பத்திரிகைகளில் பெண்விடுதலைக்கு கொடுத்திருந்த முக்கிய பங்கு வர, வர அருகி விட்டது

அடுத்த இதழில் வரும், வரும் என காத்திருந்த வாசகர்களில் நானும் ஒருவன். இறுதியில் ஆசிரியருக்கு பெண்கள் விடுதலையடைவதில் பூரண திருப்தியில்லை என எண்ணத் தோன்றுகிறது; பெண் விடுதலைக்கு ஏன் முழுக்கு போட்டு விட்டீர்கள்? (ஆக்கங்கள் இல்லையென குறிப்பிடாதீர்கள்.)

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்தவற்றையும், செய்பவைகளையும் விமர்சிக்கும் உங்கள் பத்திரிகை மற்ற இயக்கங்கள் செய்தவற்றையும் செய்பவைகளையும் ஏன் விமர்சிப்பதில்லை?

வடக்கு, கிழக்கில், அரசாங்கத்தின் ஆட்சியின் போதும், விடுதலைப் புலிகளின் ஆட்சியின் போதும், மற்ற இயக்கங்களின் ஆட்சியின் போதுமான நிலைமைகளை ஒப்பிட்டு "முக்கோண ஆட்சி" முறையை பற்றி ஒரு கட்டுரை வரைந்தால் எப்படியிருக்கும்?

க. சபேசன்.




சரிநிகருக்கு வந்த பிரசுரத்திலிருந்து.

வாழ்வில் உயிரைப் போல அளப்பரிய செல்வம் ஒன்றுமில்லை என்பார்கள். அப்படியான உயிர்ச்செல்வத்தை தியாகம் செய்ய ஒருவன் துணிகிறான் என்றால் உயிருக்கும் மேலான உன்னதமான இலட்சியம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. இந்த உன்னதமான இலட்சியம் விடுதலை தான். இந்த உன்னத இலட்சியத்திற்காகவே எமது போராளிகள் சாவை சந்தித்திருக்கிறார்கள். அடிமையாக வாழ்வதை விட சுதந்திரத்திற்காக சாவதில் அர்த்தமுண்டு என்பதை உலகிற்கு உணர்த்தியிருக்கிறார்கள். இந்த சாவுகள் சாதாரண சாவுகள் அல்ல சோகமான தனியிலிந் நிகழ்வுகள் அல்ல. இவை ஒரு புனித குறிகோளுக்காக மனிதம் படைக்கும் அற்புத வரலாற்றுக்காவியங்கள்.

விடுதலைக்காக மரணிப்பவன் வரலாற்று நாயகன் ஆகிறான். ஏனென்றால் விடுதலையின் மூச்சாகவே வரலாற்றின் சக்கரம் சுழல்கிறது. விடுதலைக்காக களத்தில் சாய்ந்த எமது வீரர்கள் காலத்தால் அணையாத வரலாற்றுத் தீபங்கள்.

## இவர்கள்..

உதாரணமாக இன்று உலகில் C. T. C. தேயிலை மற்றும் உடனடித் தேயிலை ( Instant tea) என்பனவற்றுக்கு கிராக்கி காணப்படுகின்றது. ஆனால் இலங்கையில் பெருந்தோட்ட முறையில் இந்நவீன முறைகள் அறிமுகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள சிரத்தை எடுக்கப்படவில்லை. மேலும் சந்தை ஒழுங்கு படுத்தலில் புரோக்கர் நிறுவனங்களின் ஆதிக்கமே உள்ளது. பெருந் தொகையான பணம் இந்த தரகர் நிறுவனங்களுக்கே செல்கின்றன. ஆகவே அரச நிறுவனங்ளும் நேரடியாகவே சந்தை வாய்ப்புக்களை மேற்கொண்டால் வருமானம் வெளியே செல்ல மாட்டாது. ஆகவே பொதுவாக கூறின் ஆட்சியிலிருந்த அரசுகள் தோட்டங்கள் நட்டத்தில் இயங்கும் நிலையிலிருந்து மீள உறுதியான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை.

### தனியார் மயமாக்கலின் சமூக அரசியல் விளைவுகள்.

பெருந்தோட்ட தனியார் மயமாக்கத்தை தனியே ஒரு பொருளாதார பார்வையில் மாத்திரம் பார்க்க முடியாது. அதன் சமூக அரசியல் பக்கமும் முக்கியமானது. இந்த விடயம் 80% தமிழ் பேசும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களையும் அவர்களது வாரிசுகளையும சம்பந்தப்பட்ட விடயமாகும். ஆகவே அரசு, எதிர்கட்சிகள் மற்றும் பொது நல தாபனங்கள்

இந்தப் பிரச்சினையை ஒரு நட்டத்தில் இயங்கும் துறையை இலாபகரமான முயற்சியாக மாற்றியமைக்கும் ஒரு நடவடிக்கையாக மாத்திரம் கருத முடியாது. கிட்டத்தட்ட 8 இலட்சம் ஜனத்தொகையைக் கொண்ட ஒரு சிறுபான்மை தேசிய இனத்தின் வாழ்நிலை சம்பந்தமான பிரச்சினையாக இதனை கருத வேண்டும். அரசாங்க துறையாக காணப்படும் போதே தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. கிராமப்புறங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியில் தோட்டப்புறங்களில் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆகவே தனியார் மயமாக்கப்பட்டதும் இதற்கு என்ன உத்தரவாதம் உள்ளது?

தோட்டப்புறங்களில் இதுவரை காலமும் கிராமங்களில் செயற்படுத்தும் அளவுக்கு சமூக அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அரசாங்க நடவடிக்கைகள் செயற்படுத்தப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட அளவு யுனிசேப், (UNICEF) ஒருங் கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (IRDP) மற்றும் நோறாட் (NORAD) போன்ற நிறுவனங்களால் அரசாங்க அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தனியார் மயப்படுத்தப்பட்டால் இந்த நிலைமைகள் இதே அளவு நீடிக்குமா? மலையக தமிழ் மக்கள் கிட்டத்தட்ட எட்டு இலட்சம் பேர் வாழ்ந்தும் கூட தோட்டப் பகுதியில் அவர்களுக்கென ஒரேயொரு தமிழ் கிராம சேவகர் மாத்திரமே நுவரெலியா மாவட்டத்தில் உள்ளார். ஆகவே அரசாங்க நடவடிக்கைகளை தோட்டங்களில் செயற்படுத்த இதுவரைகாலமும் தோட்ட முகாமையாளர்கள் பயன்படுத்தப்பட்டனர். இதனை தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் எந்தளவு சித்திரவதையுடன் செயற்படுத்துவர்.

தோட்டங்களில் தொழிலாளர்கள் இதுவரைகாலமும் தமது தொழிற் சங்கங்கள் மூலம் பல உரிமைகளை. பெற்று வந்துள்ளார்கள். தனியார் மயமாவதால் தொழிற்சங்க

நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுமா? தோட்டங்களில் காணப்படும் வெற்று காணிகளில் (புற் காணிகள்) வீட்டுத் தோட்டங்களை மேற்கொள்ளுகிறார்கள். இவ்விதமான சலுகைகள் சிலவேளை மேற்படி நடவடிக்கையால் இடைநிறுத்தப்படலாம்.

மொத்தத்தில் தோட்ட தனியார் மயமாவதன் மூலம் தற்போது உள்ள நிலைமையிலும் பார்க்க நிலைமைகள் மோசமாக கூடிய சூழல்கள்தான் அதிகம் உள்ளன. தனியார் மயமாவதை பயன்படுத்தி தோட்ட மக்களின் வாழ்க்கையில் அடிப்படை மாற்றம் ஒன்று ஏற்படுத்தப் போவதாக இ. தொ. கா. போன்ற அமைப்புக்கள் கூறுகின்றன. தோட்ட மக்களின் அதாவது மலையக தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒரு அடிப்படை மாற்றம் ஏற்படவேண்டுமானால் அதற்கென சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் ஒன்று கூட்டி அதற்கான ஒரு திட்டத்தை வரைந்து அதன்படி செயற்படுத்த வேண்டும். தோட்டங்கள் தனியார் மயமாகும் நடவடிக்கையோடு சம்பந்தப்படுத்திதான் இதனை செய்ய வேண்டுமென்பதல்ல. அல்லது தனியார் மயமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை அதற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மலையக மக்களின் அரசியல் உரிமைகள் காணி, பாதுகாப்பு, கல்வி, சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள், மற்றும் நிர்வாக விடயங்கள் சம்மந்தமாக மலையக மக்கள் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் கொள்கை வகுத்து அதனை செயற்படுத்த முயற்சிப்பதன் மூலமே மலையக மக்களின் வாழ்வில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த முடியும்●

## தேசிய விடுதலை...

ஆரம்பத்தில் தொடக்கி வைப்பதற்கும், உண்ணாவிரதத்தினை முடித்து வைப்பதற்கும் மட்டுமே வருகை தந்தார்கள். பத்திரிகையாளர்களோடு வருகை தந்து உண்ணாவிரதக் கூட்டங்களில் பேசி, புகைப்படம் எடுத்ததோடு தமது கடமைகளை முடித்துக் கொண்டு திரும்பிச் சென்றார்கள். மறுநாள் பத்திரிகைகளில் அவர்களுடைய பேச்சும், புகைப்படங்களும், வெளிவருவது அவர்களுக்கு நல்ல பிரச்சாரமாக அமைந்தது. இதைவிடுத்து போராட்டத்தை முன்னெடுப்பதிலோ அல்லது முழுமையாகக் கலந்து கொள்வதிலோ அவர்கள் எதுவும் அக்கறை செலுத்தவில்லை. போராட்டம் தொடர்பான எதுவித உழைப்பினையும் மேற்கொள்ளாது அதன் பயன்பாட்டினை பெற்றுக் கொள்வதற்கே முண்டியடித்தார்கள்.

உண்ணாவிரதப் போராட்டங்களை விட ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மௌன ஊர்வலங்கள் என்பவற்றையும் இவர்கள் நடாத்தினர். இவற்றில் முக்கியமானது 1974 இல் யாழ் பல்கலைக்கழகத்தினைத் திறப்பதற்காக அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வந்த போது அதனை எதிர்க்கும் முகமாக நடாத்திய ஊர்வலம் ஆகும். இவ்வூர்வலம் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட போது தமிழரசுக் கட்சியினர் இதனை நடாத்த விடவில்லை. பொலிஸார் இப்போராட்டத்தைக் கலைக்க முயற்சி செய்தால் மக்கள் தாக்கப்படவும், அல்லற்படவும் நேரிடும் என அவர்கள் கூறினர் இக்கூற்றினை தமிழ் இளைஞர் பேரவையினர் ஏற்காததனால் அவர்களுக்கும் தமிழ் இளைஞர் பேரவையினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் நடு வீதியில் வைத்து ஏற்பட்டது. குறிப்பாக தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளர் வரதராஜப் பெருமாளுக்கும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் அமிர்தலிங்கத்திற்குமிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அமிர்தலிங்கம் ஆத்திரப்பட்டு தமிழினத்தின் துரோகி, தமிழினத்தை அழிக்க வந்தவன் என வாயில் வந்தபடி வரதராஜப் பெருமாளைப் பேசுமளவிற்கு அது உச்சமாக அமைந்திருந்தது. இவ்வெதிர்ப்புக்கு மத்தியிலும் அவர்கள், ஊர்வலத்தை நடத்தினர்.

கிராமங்கள் தோறும் கருத்தரங்குகளை நடாத்துவதிலும், போராட்டங்கள் பற்றிய விளக்கங்களைக் கொடுப்பதிலும் கூட இவர்கள் முக்கிய பங்காற்றினார்கள். இவர்களின் காலத்திலேயே கிராமங்களில் கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலம் அரசியல் பிரச்சாரம் செய்தல் என்ற வடிவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கருத்தரங்குகளில் மக்கள் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் இவர்கள் விபரமாக பதில்களை அளித்தனர். மக்கள் கேள்விகளைக் கேட்கும் போதே அது தொடர்பாக விடைகளை அளிப்பதற்காக அரசியல் நூல்களையும் படிக்க ஆரம்பித்தனர்●

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்

இல 6 அலோசாலை கொழும்பு - 3 தொலைபேசி - 574047.

## 'விசாவும்' புல்லட் புறூப்பும்

அண்மையில் வீரகேசரியில் வெளிவந்த இரண்டு செய்திகள் பலருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. வீரகேசரியின் செய்தியிலும் எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் அம்சம் ஏதாவது இருக்கிறதென்றால் அவை எவைபற்றியதாக இருக்கமுடியும் என்பது வெளிப்படை. ஆம்! அவை வடக்குப் பற்றிய செய்திகள்தான்.

ஒன்று "பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் யாழ்ப்பாணத்தில் நடாத்திய ஊர்வலம்!" மற்றது நவம்பர் 18ம் திகதிக்குள் அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்து சகச நிலைக்குத் திரும்பியுள்ள பிரதேசங்களில் வேலை பார்க்கும் அரச ஊழியர்கள் உடனடியாக அங்கு திரும்பாவிட்டால் அவர்கள் வேலையிலிருந்து நீங்கியதாக் கருதப்படுவர் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு!

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்த ஊர்வலம் தொடர்பான செய்தியில் வீரகேசரி இப்படி எழுதியிருந்தது. தொழில் இழந்துள்ள எமக்கு மீண்டும் தொழில்வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டும்; குடாநாட்டில் இராணுவ முற்றுகையை நீக்கி உணவுப்பொருட்களை எடுத்துவர, இடமளிக்க வேண்டும். குடாநாட்டில் அமுலில் இருக்கும் பொருளாதாரத்தடை நீக்கப்படுதல் வேண்டும். குடாநாட்டிலிருந்து ஏனைய இடங்களுக்குப் போக்குவரத்து வசதி செய்யப்பட வேண்டும், என்ற கோரிக்கையை ஊர்வல முடிவில் மகஜராக தொழிலாளர்கள் யாழ் கச்சேரி உயரதிகாரிகளிடம் சமர்ப்பித்தனர். மற்றதெல்லாம் சரிதான்; கேக்கப்பட வேண்டியவைதான்.

ஆனால் குடாநாட்டிலிருந்து வெளியேற அரசு செய்ய வேண்டியது என்ன? தலைக்கு 2 பவுண் வீதம் புலிகளுக்கு அனுப்பி வைப்பதா? அல்லது யாழ்ப்பாணம் பஸ் நிலையம் வரை 'மக்கள் மயமாக்கிவிட்ட' பஸ்களிலொன்றை அனுப்பிவைப்பதா? (யாழ்ப்பாணத்தில் இருந்த பஸ்களில் பலவற்றின் 'பொடிகள் அலுமீனியத் தேவைக்காக புலிகளால் பாவிக்கப்பட்டுவிட்டதாகவும்; எஞ்சின்கள் உள்ளூர் பாவனையாளருக்கு விற்கப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகின்றது!,

யாழ் கச்சேரி அதிகாரியிடம் மகஜரைக் கையளித்த தொழிலாளர்கள் அவற்றில் ஒரு பிரதியை புலிகளிடம் கையளித்திருக்கலாம். அல்லது அவர்களது 'முறைப்பாட்டுப் பெட்டிகளில்' போட்டிருந்திருக்கலாம். அப்படிப் போட்டிருந்தால் வேறு இடங்களுக்குப் போவதற்கு வசதி வழங்கப்படுகிறதோ இல்லையோ விசா இல்லாமல் "மேலே" போக நிச்சயம் அனுமதி கிடைத்திருக்கும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கிறார் ஒரு 'அனுபவஸ்தர்'.


இரண்டாவது செய்தியைப்பற்றி ஒரு ஆசிரியை சொன்ன அபிப்பிராயம் இது;

"அரசாங்க ஊழியர்களுள் ஆசிரியர்களும் அடங்குவார்களோ தெரியவில்லை ...... ஆனால் இந்த அரசாங்கம் வடக்கைப்பொறுத்தவரை 2000 அடிக்கு மேலிருந்துதான் பேசுது- வெளியிலிருந்தபடி தீவுப்பகுதி அரசின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதால் அங்கு போகும்படி அரசு கேக்குது. ஆனால் எப்படிப் போறது. தீவுப்பகுதிப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் யாழ்ப்பாணப்பள்ளிக்கூடங்களில் நடக்குது. அப்ப நாங்கள் எப்படிப் போறது. யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதிக்குப் போக "பெடியள்" விடாங்கள். கொழும்பிலை இருக்கிற நாங்கள் தீவுப்பகுதிக்குப் போறதெண்டால் ஹெலியிலைதான் போவேணும்.

போய்த்தான் என்ன செய்வது? மாணவர்களையும், மக்களையும் தீவுப்பகுதியில் குடியேற்றுவது எப்போது? ஏற்கனவே அகப்பட்டவர்கள் போக யாழ்ப்பாணம் நோக்கி ஓடி வந்த தீவுப்பகுதியின் பெரும்பான்மை மக்களுக்கும் அரசாங்க ஊழியர்கட்கும் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

ஒரு ஆலோசனை; கொஞ்ச "புல்லட் புறூப்" மேலங்கிகளை ஆகாயத்திலிருந்து போட்டால் யாராவது போட்டுக்கொண்டு தீவுப்பகுதி நோக்கி வர முயலக்கூடும்!

## விடுதலை செய் !



இந்திய அரசு தன்னுடைய 'பயங்கரவாதச்' சட்டங்களுக்கு கீழ் திரு. சிவநாயகத்தைக் கைது செய்து ஆறு மாதங்களாகின்றன. கைது செய்யப்படும் வேளையில் திரு. சிவநாயகம் கடுமையாக நோயுற்றிருந்தார். வேலூர் மத்திய சிறையில் இப்போது அடைக்கப்பட்டுள்ள திரு. சிவநாயகத்தின் உடல் நிலை மோசமாக இருக்கிறது என்று அறிகிறோம்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த SATURDAY REVIEW என்னும் புகழ்பெற்ற ஆங்கில வாரப் பத்திரிகையின் நிறுவன ஆசிரியரும் தன்னுடைய அநாயாசமான ஆனால் ஆழத் தைக்கும் ஆங்கில நடை மூலம் 82 - 84 காலப் பகுதிகளில் இலங்கை அரசின் மனித உரிமைகள் மீறலை அனைத்துலக அரங்கில் அம்பலப்படுத்தியவருமான திரு. சிவநாயகத்துக்குப் பலதடவைகள் இந்திய அரசே 'புகலிடம்' அளித்தது.

SATURDAY REVIEW வின் ஆசிரியப் பொறுப்பை ஏற்பதற்கு முன் கொழும்பில் முக்கியமான பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிந்தவர் மூத்த பத்திரிகையாளர் திரு. சிவநாயகம்.

இந்த வருடம் ஜுலை மாதம் 17ம் திகதி இந்திய அரசு திரு. சிவநாயகத்தைக் ஃகது செய்த போது சொன்ன காரணங்கள் நகைப்புக் கிடமானவை.

1. உரிய ஆவணங்களின்றி இந்தியாவில் தங்கியமை.

2. பதிவு செய்யாமல் 'தமிழ் நேஷன்' (TAMIL NATION) எனும் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டமை.

3. உரிய முறையில் அனுமதி பெறாமல் வெளிநாட்டிலிருந்து பணம் பெற்றமை.

ஒரு வருடத்திற்கு மேலாக வெளிவந்து கொண்டிருந்த TAMIL NATION பத்திரிகையின் கருத்துக்களுடனோ அல்லது திரு. சிவநாயகம் அவர்களது பின்னைய கருத்துக்களுடனோ 'சரிநிகர்' க்கு முற்று முழுதான உடன்பாடு இல்லை. சில சந்தர்ப்பங்களில் TAMIL NATION தமிழ்ப் பேரினவாதத்தின் குரலாகவே இருந்தது; என்பதும் உண்மை.

ஆனால் இத்தகைய காரணங்களுக்காகவோ அன்றி 'மேலான பத்திரிகை சுதந்திரத்தைப் பேணும் ஜனநாயக' வழி முறைகளைக் காப்பதற்காகவோ இந்திய அரசு திரு. சிவநாயகத்தைக் கைது செய்யவில்லை. இந்திய அரசின் நலனும் இலங்கைத் தமிழர்களின் நலனும் ஒன்றாக உள்ளபோது ஆதரிப்பதும் வேறாக வருகிற போது ஆட்டி வைப்பதும் இந்தியாவின் சாணக்கியப் பிராமணர்களுக்குக் கைவந்த கலை.

பத்திரிகை சுதந்திரத்தின் பெயரா்லும், கருத்துச் சுதந்திரத்தின் பெயராலும் கோட்கிறோம்; இந்திய அரசே! திரு. சிவநாயகத்தை உடனடியாக விடுதலை செய்!

சரிநிகர் மாத இதழ் இல 6, அலோசாலை, கொழும்பு 3. இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்திற்குமான இயக்கம் (MIRJE) சார்பில் ச. பாலகிருஷ்ணனால் கொழும்பு 10 லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது
05.12.91